# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. I Issue 9 December 2011

இம்மாத மலரில். . . .

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| சாவித்ரி | 2 |
| வாழ்க்கையில் சாதிப்பது | 4 |
| லைப் டிவைன் | 15 |
| இம்மாதச் செய்தி | 28 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 29 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 32 |
| அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு | 33 |
| யோக வாழ்க்கை விளக்கம் VI | 39 |
| குறுக்கு வழி | 48 |
| லைப் டிவைன் - கருத்து | 57 |
| அஜெண்டா | 60 |
| அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் | 62 |


❋❋❋

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

நடந்தவை எல்லாம் நல்லது என்பவருக்கு நல்லது மட்டுமே நடக்கும்.

இடையறாத நினைவே இன்றியமையாத நிபந்தனை.

பெருமைப்பட ஒன்றுமில்லை எனில் வெட்கப்படவும் ஏதும் இல்லை.

உள்ளது மாற உள்ளொளி தேவை.

## அறிவிப்பு

டிசம்பர் 2011 இதழுடன் சந்தா முடிவடையும் சந்தாதாரர்கள் உடனடியாக சந்தாவினைப் புதுப்பிக்க வேண்டுகிறோம்.

## P.133 Else could he roam on a free sunlit soil

### சூரிய ஒளி சுடர்விடும் மண்ணில் அவன் பவனி வந்தான்

☆ வலியறியாத சிறு குழந்தையின் விலங்கு மனம்
☆ மரமும், மலரும் போல் அசையாமல், ஆனந்தம் பெறுபவர்.
☆ அனுக்கிரஹம் செய்ய வந்த அளவிலா வலிமை,
☆ இருந்து உழன்று ஏங்கித் தவிக்கலாயிற்று.
☆ காலத்தினூடே கணீரென ஒலித்த சிரிப்பு அடங்கி ஒடுங்கியது:
☆ இயல்பான மனித சந்தோஷம் லேசாக இருண்டது
☆ அவன் பெற்ற வருத்தம் அவன் தலைவிதியை வளர்த்தது.
☆ விலங்கின் அறிவில்லாத ஆனந்தம் அவனை விட்டு விலகியது,
☆ கவலையும், சிந்தனையும் அவன் அன்றாட வாழ்வில் கனத்தது;
☆ பெரியதையும் கண்டான், அதிருப்தியும் கொண்டான்,
☆ புலனறியாதது புலப்படும் விழிப்பு எழுந்தது.
☆ திகட்டாத சிந்தனை தித்திக்கும் மனம்; அறிவதற்கு அளவு கடந்த வாய்ப்புளது
☆ மேல் மன வாழ்வின் மேன்மைகளை முழுவதும் அறிந்தான்,
☆ ஜீவனின் அந்தரங்க ஆழம் அவன் ஆராய்ச்சிக்குக் காத்திருக்கிறது.



☆ மனமாகி, ஆத்மாவாகி, அவன் பிரம்மமாகிறான்.
☆ வலுவற்ற கூரையின் கீழ் இயற்கையை ஏற்று ஆள்கிறான்
☆ நீண்ட இருண்ட சமாதி போன்ற உறக்கத்தினின்று அவனுள் ஜடம் விழிக்கிறது
☆ இறைவன் வருகையை அவனுள் பூமாதேவி காண்கிறாள்
☆ கபோதியான சக்தி இலட்சியத்தைக் காண இயலவில்லை
☆ துடிக்கும் சக்தியின் உறுதி பசி வேகத்தில் வருகிறது
☆ ஓய்ந்து ஒடுங்கிய உடலுருவத்துள் வாழ்வு தன் வித்தை ஊன்றியது
☆ இனிய உறக்கத்தினின்று குருட்டு சக்தியாய் அது எழுந்தது
☆ புலன்களை உணரக் கட்டுப்படுத்தும் ஒழுங்கு
☆ சூன்யத்தின் வேலை சுகதுக்கங்களைக் கடந்தது
☆ அகன்ற ஆற்றொழுக்கான வாழ்வை கலக்கும் கனவுலக அனுபவம்
☆ உறக்கத்தில் உழலும் பிரபஞ்ச ஜீவனற்ற பரப்பு
☆ வலிமையான கைதி விடுதலைக்காகத் திணறுகிறான்
☆ ஆர்வம் உயிர்ப்பித்த ஜீவனற்ற அழைப்பு
☆ இதயத்தில் அவளெழுப்பிய தேவையின் வேகம்
☆ உயிரற்ற பொருள்களின் ஆழ்ந்த அமைதியினூடே
☆ உழைப்பும், பிரார்த்தனையும், போராட்டமும் எழுந்து குரலெழுப்பின
☆ வழியறியாத வழிகாட்டி வழிகாட்ட முன் சென்றான்
☆ எண்ணம் தன்னையிழந்தது, எதுவும் தெரியும் பாங்கில்லை
☆ அறியாத உலகின் அளவிறந்த வீச்சு அவன் அரவணைப்புக்குக் காத்திருக்கிறது

❋❋❋

# வாழ்க்கையில் சாதிப்பது

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

நான் இதுவரையிலும் நாம் வெளியில் செய்கின்ற வேலைக்குத் தேவைப்படுகின்ற organisationனைப் பற்றி சொல்லிக் கொண்டு வந்தேன். ஆனால் அப்பா அவர்கள் நமக்குள்ளிருக்கும் பர்ஸனாலிட்டிக்கும் ஒரு organisation உண்டு என்கிறார். வெளி organisation எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்கு உள் பர்ஸனாலிட்டி organisation முக்கியம் என்கிறார். மேலும் வெளி organisationஉம் உள் organisationஉம் perfectஆக இருக்கும் பொழுதுதான் அதிகபட்சப் பலனும் கிடைக்கும் என்கிறார். சாதனைக்கு அவர் மூன்று விதிமுறைகளை வழங்கியிருக்கிறார். அது பின்வருமாறு:

1. எடுக்கின்ற முடிவு எல்லா விவரங்களும் தெரிந்து வைத்துக் கொண்டு எடுக்கப்படுகிற முடிவாக இருக்க வேண்டும்.
2. அந்த முடிவை அமல்படுத்துவதில் முழு உற்சாகம் இருக்க வேண்டும்.
3. செய்கின்ற வேலையை நேர்த்தியாகச் செய்து முடிக்கக் கூடிய செயலாற்றும் திறன் இருக்க வேண்டும்.

ஸ்ரீ அப்பா அவர்கள் சொல்வதை வைத்துப் பார்க்கும் பொழுது சரியாக விவரங்களைத் தெரிந்து கொண்டு நாம் ஒரு முடிவை எடுக்கிறோம் என்றால், அந்த முடிவின் அடிப்படையில் நாம் ஆரம்பிக்கும் வேலையில் முழு உற்சாகம் இருக்கிறது என்றால், அந்த வேலையை நேர்த்தியாகச் செய்யக் கூடிய செயலாற்றும் திறன் இருக்கிறது என்றால், அந்த வேலை வெற்றிகரமாக நிறைவேறி நாம் விரும்பும் பலன் கிடைக்கும்



என்றாகிறது. எவரேனும் ஒருவர் தாம் செய்த வேலை கூடிவரவில்லை, எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்றால், மேற்கண்ட மூன்று வழிமுறைகளில் ஏதேனும் ஓர் இடத்தில் அவர் குறை வைத்திருப்பார். அவர் என்ன வேலையை எடுத்துக் கொண்டு செய்தாரோ அதுபற்றி அவர் எடுத்த முடிவு ஒரு விவரம் தெரிந்த முடிவாக இருக்காது. மேலும் செய்த வேலையில் இருக்க வேண்டிய முழு உற்சாகம் இருந்திருக்காது. மேலும் நேர்த்தியாக அந்த வேலையைச் செய்து முடிக்கக் கூடிய செயலாற்றும் திறன் அவரிடம் இருந்திருக்காது. விவரம் தெரிந்த முடிவு என்றால் என்ன என்று நீங்கள் கேட்கலாம். விவரம் தெரிந்த முடிவு என்றால், தான் என்ன செய்யப் போகிறோம் என்று ஒருவருக்குத் தெரிய வேண்டும். அதற்குண்டான முறையான பயிற்சி மற்றும் திறமையை அவர் வளர்த்துக் கொண்டிருக்க வேண்டும். மேலும் அவர் செயல்பட விரும்பும் துறையில் என்னென்ன risk மற்றும் சிரமங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதை அவர் உணர்ந்திருக்க வேண்டும்.

பிஸினஸில் ஈடுபட ஒருவர் விரும்புவதாக வைத்துக் கொள்வோம். இம்முடிவை வெற்றிகரமாகச் செயல்படுத்த அவர் விரும்பினார் என்றால் என்ன பிஸினஸ் துறையில் அவர் செயல்பட விரும்புகிறார் என்பதை முதலில் முடிவு செய்ய வேண்டும். தான் ஈடுபட விரும்புகின்ற துறையில் அவருக்கு முறையான ஒரு பயிற்சி இருக்க வேண்டும். அடுத்தபடியாக அவர் விற்க விரும்பும் பொருளுக்கோ அல்லது அவர் வழங்க விரும்பும் சர்வீஸிற்கோ மார்கெட்டில் என்ன demand உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இறுதியாக, இந்த பிஸினஸிற்குத் தேவையான முதலீடு மற்றும் டெக்னாலஜி மற்றும் ஊழியர் சப்போர்ட் எல்லாவற்றையும் ஏற்பாடு செய்து கொள்ள அவரால் முடியுமா என்று அவருக்குத் தெரிய வேண்டும். எந்தத் துறையில் பிஸினஸ் செய்வது என்பதே அவரால்

முடிவு செய்ய முடியவில்லை என்றால் அவரால் முதலடியே எடுத்து வைக்க முடியாது. முதலீடு இருபத்தைந்து இலட்சம் அளவிற்குத் தேவைப்படுகின்ற பொழுது இவருடைய சேமிப்பு மற்றும் இவருக்குக் கிடைக்கக்கூடிய கடன்கள் எல்லாம் சேர்ந்து பத்து இலட்சம்தான் வருகிறதென்றால், இந்த 10 இலட்சத்தை வைத்துக் கொண்டு அவரால் பிஸினஸ் ஒழுங்காகச் செய்ய முடியாது. அடுத்ததாக இந்தத் துறையில் raw materials கிடைப்பதே சிரமம் என்றிருந்தால், அது தெரியாமல் இவர் இந்த பிஸினஸில் இறங்கிவிட்டார் என்றால், பின்னர் கஸ்டமர்களுக்கு ரெகுலராக சப்ளை செய்ய முடியவில்லை என்ற பிரச்சனை வரும். அதன் விளைவாக பிஸினஸ் முடங்க நேரிடும். பிஸினஸில் இவருக்குப் போதுமான பயிற்சி இல்லை என்றால், டெக்னிக்கல் நுணுக்கங்கள் இவருக்குப் புரியாமல் போய்விடும். அப்பட்சத்தில் எல்லாவற்றிற்கும் டெக்னிக்கல் staffஐ நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். அவர்கள் சொல்வதைத்தான் இவர் கேட்டுக் கொள்ளும்படியாக இருக்கும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவருக்குக் கம்பெனியில் முழு கண்ட்ரோல் இருக்காது. ஆகவே இத்தகைய குறைபாடுகள் அவருடைய முடிவில் இருந்தது என்றால், பிஸினஸ் செய்ய வேண்டும் என்று அவர் எடுக்கின்ற முடிவு விவரம் தெரிந்து எடுத்த முடிவாக இருக்காது. இப்படி ஒரு முடிவை எடுத்து அமல்படுத்தினாலும் அந்த பிஸினஸ் நெடுநாள் நீடிக்கவும் செய்யாது. அரசியல் அதிகாரத்திற்கு ஆசைப்படுகின்ற பல பேர் தேர்தலில் நின்றால் எவ்வளவு செலவாகும், எத்தகைய முன்னேற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கும், எவ்வளவு ஆள் பலம் தேவைப்படும் என்று விவரம் தெரியாமலேயே அரசியலில் இறங்கிவிடுகிறார்கள். பின்னர் அவர்கள் போட்ட பட்ஜெட்டைத் தாண்டித் தேர்தல் செலவு போகும் பொழுது ஒரு மீட்டிங் ஏற்பாடு செய்வதற்குப் போதுமான ஆள்பலம் கிடைக்காமல் மீட்டிங்கைச் சரிவர நடத்த முடியாமல் போகும்பொழுதும் இவர்களுக்கு மிகவும் அதிர்ச்சி



வருகிறது. அதன் விளைவாக அரசியல் எங்களை ஏமாற்றி- விட்டது என்று புலம்புகிறார்கள்.

இப்படி விவரம் தெரியாமல் முடிவு எடுப்பதைப்போல எடுத்துக் கொள்கின்ற வேலைக்குத் தேவையான ஈடுபாடும், உற்சாகமும் இருக்கிறதா என்று தெரியாமல்கூட சிலர் முடிவு எடுக்கிறார்கள். ஸ்ரீ அப்பா அவர்களைப் பொறுத்தவரையிலும் நாம் எந்தவொரு வேலையை அனுபவித்துச் செய்கிறோமோ அந்த வேலை கூடிவரும். மற்றும் எதைச் சாதிக்கிறோமோ அதை நம்மால் அனுபவிக்க முடியும் என்று சொல்வார்கள். அதாவது அனுபவிப்பதே சாதனை. சாதனையே அனுபவிப்பது என்றாகிறது. இப்படிப் பார்க்கும் பொழுது தாங்கள் செய்கின்ற வேலையை அனுபவித்துச் செய்கின்ற எல்லோருமே அந்த வேலையில் வெற்றி பெறுவார்கள் என்றாகிறது. ஒரு பிஸினஸ்மேனோ, டாக்டரோ, வழக்கறிஞரோ, ஆசிரியரோ, விவசாயியோ தாங்கள் செய்கின்ற வேலையை அனுபவித்துச் செய்வதாகச் சொன்னார்கள் என்றால் அவ்வேலையை அவர்கள் வெற்றிகரமாகவே செய்து கொண்டிருப்பார்கள். சாதனையும், அனுபவிப்பதும் பரஸ்பரம் ஒன்றோடொன்று தொடர்புடையவை எனும்பொழுது ஆங்கிலத்தில் இவற்றை complementary இரட்டைகள் என்று சொல்வார்கள். இந்த இரட்டைகளில் ஒன்று இருக்கும் பொழுது அவசியம் இன்னொன்றும் இருக்கும். சாதனையும், அனுபவிப்பதும் எங்கே தவறுகிறது என்றால் எடுக்கின்ற முடிவில் பல பேர் உறுதியாக நிற்பதில்லை. அந்த இடத்தில்தான் தவறு வருகிறது. சுயமாகத் தொழில் செய்வதில் பல பேர் ஆர்வம் காட்டுகிறார்கள். சம்பளத்திற்கு வேலை செய்வதைவிட சுயமாக தொழில் செய்யும் பொழுது அதிக வருமானம் கிடைக்கிறது என்பதால் பல பேருக்குச் சுய தொழிலில் ஆர்வம் வருகிறது. இது ஒரு பக்கம் உண்மை என்றாலும் இன்னொரு பக்கத்தில் சுய தொழிலில் நிறைய ரிஸ்க்

இருக்கிறது என்பதும் உண்மையாகும். ஆகவே விவரம் தெரியாமல் சுய தொழிலில் இறங்குபவர்களுக்குத் தொடக்கத்திலேயே சிரமங்கள் தலையெடுத்து அவர்கள் மனதில் வைத்திருக்கின்ற பெரிய வருமானத்தை உடனடியாக பார்க்க முடியாமல் போனால் அவர்களுக்கு ஆரம்பத்தில் வந்த உற்சாகம் அப்படியே குறைந்து போய் விடாமுயற்சி இல்லாமல் தொடங்கிய பிஸினஸை விட்டுவிடுகிறார்கள். இதனால்தான் எந்த ஒரு புதிய வேலையைத் தொடங்கினாலும் ஆரம்பத்தில் இருக்கின்ற உற்சாகம் கடைசிவரை நீடிக்க வேண்டும். மற்றும் இடையில் வரும் சிரமங்களைக் கண்டு பின்வாங்காத அளவிற்கு மனோதிடமும், விடாமுயற்சியும் நமக்கு வேண்டும். உலக சரித்திரத்தில் பெரிதாக சாதித்தவர்கள் எவரை எடுத்துக் கொண்டாலும், ''வெற்றி என்பது சுலபமாகக் கிடைக்கவில்லை, இடையில் பல சிரமங்கள் வந்தன. இருந்தாலும், உற்சாகம் கெடாமல் விடாமுயற்சியுடன் இறுதிவரை போராடித்தான் வெற்றி கண்டோம்" என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

சாதனைக்குண்டான மூன்றாவது நிபந்தனை, நேர்த்தியாக செயல்படும் திறன். நிறைய பேருக்கு அவர்கள் எந்தத் துறையில் வேலை செய்ய விரும்புகின்றார்களோ அதற்குண்டான தியரிட்டிக்கல் knowledge நிறையவே இருக்கும். ஆனால் practical work என்று வந்தால் கற்றுக் கொண்டதை நேர்த்தியாக பிஸிக்கல் லெவலில் செய்து முடிக்கக்கூடிய செயலாற்றும் திறன் பல பேருக்கு இருப்பதில்லை. ஆங்கிலத்தில் இதை executive capacity என்கிறார்கள். தமிழில் நான் இதை செயலாற்றும் திறன் என்கிறேன். பல ஆண்களும், பெண்களும் மருத்துவம், சட்டம், பிஸினஸ் மேனேஜ்மெண்ட், மற்றும் ஆடிட்டிங் எல்லாம் சிறப்பாகவே கல்லூரிகளிலும், இன்ஸ்டிட்யூட்களிலும் கற்றுக் கொள்கிறார்கள். ஆனால் எல்லாருமே கைதேர்ந்த டாக்டராகவோ, வழக்கறிஞராகவோ, ஆடிட்டராகவோ, பெரிய பிஸினஸ்மேனாகவோ தலையெடுப்ப-



தில்லை. ஒரு மருத்துவ கிளினிக்கை நிறுவி, வருகின்ற நோயாளிகளுடைய நம்பிக்கையைப் பெற்று, அவர்களுக்கு திருப்தி வரும் வகையில் அவர்களுடைய நோயைக் குணப்படுத்தி ஒரு நல்ல பெயர் வாங்க வேண்டும் என்றால் அதற்கு ஒரு practical organising ability வேண்டும். அந்தத் திறமை இல்லாதவர்களால் எவ்வளவு தியரிட்டிக்கல் knowledge இருந்தாலும் வெற்றிகரமாக டாக்டராகப் பணியாற்றி நிறைய சம்பாதிக்க முடிவதில்லை. சட்டக் கல்லூரியில் சட்ட நுணுக்கங்களைத் தெளிவாக புரிந்து கொண்டு ஒருவர் பட்டம் பெற்று வெளியில் வரலாம். ஆனால் நீதிமன்றத்தில் வழக்காட வேண்டும் என்றால் நல்ல பேச்சாற்றல் வேண்டும். மேலும் எதிர்கட்சி வழக்கறிஞரை வாதத்தில் வெல்லக்கூடிய திறமை வேண்டும். இந்தத் திறமைகள் இல்லாதவர்களால் ஒரு நல்ல சாமர்த்தியமான வழக்கறிஞர் என்ற பெயர் வாங்க முடிவதில்லை. அறிவு தெளிவாக இருப்பதால் இவர்கள் பேசாமல் நீதிபதிகளாக மாறிவிடுவார்கள். நீதிபதிகளுக்குப் பேச்சாற்றல் அவசியம் இல்லை. அழகாகத் தீர்ப்பு எழுதத் தெரிந்தால் போதும். இம்மாதிரியே பிஸினஸ் மேனேஜ்மெண்ட் நுணுக்கங்கள் பிஸினஸ் மேனேஜ்மெண்ட் கோர்ஸில் சேர்ந்து lecture மூலமும், text புத்தகங்கள் மூலமும் கற்றுக் கொண்டால் மட்டும் போதாது. வெளிவுலகில் வெற்றிகரமாக பிஸினஸ்மேனாக செயல்பட விரும்பினால் வெளி மார்க்கெட் சூழ்நிலைகளைச் சமாளிக்கத் தெரிந்திருக்க வேண்டும். ஒரு பிஸினஸ் leader என்று பெயர் வாங்க விரும்புகின்றவருக்கு அவருக்குக் கீழ் வேலை செய்பவரிடம் வேலை வாங்கத் தெரிய வேண்டும். அதாவது இவருடைய அதிகாரத்திற்கு அவர்கள் கட்டுப்பட்டிருக்க வேண்டும். மேலும் உற்பத்தி, விற்பனை, மார்க்கெட் டிமாண்ட், பணத் தேவை மற்றும் manpower தேவைகள் இவற்றையெல்லாம் முறையாக ஒருங்கிணைத்துச் செயல்படத் தெரிய வேண்டும். இவையெல்லாம் அவருடைய

கட்டுப்பாட்டிற்குள் இருந்ததென்றால், அவருடைய பிஸினஸ் முறையாகவும், சீராகவும், ஒழுங்காகவும் நடக்கும். ஆனால், மார்க்கெட் தேவைக்கேற்றபடி சப்ளை செய்ய முடியவில்லை என்றாலோ, உற்பத்தி செலவைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றாலோ, மற்றும் ஊழியர்கள் கேட்கும் அதிக சம்பளத்தைக் கொடுக்க முடியவில்லை என்றாலோ, பிஸினஸை நெடுநாள் இலாபகரமாக அவரால் நடத்த முடியாது. இக்காரணங்களால் தான் எவ்வளவு தெளிவான தியரிட்டிகல் knowledge ஒருவருக்கு இருந்தாலும் அதை மட்டும் வைத்துக் கொண்டு பிஸிக்கல் லெவலில் வெற்றிகரமாக ஒரு காரியத்தைச் சாதிக்க முடியாது. ஆகவே தியரிட்டிகல் knowledge உடன் practical organising ability உள்ளவர்களுக்குதான் வேலைக் கூடிவரும்.

அப்பா அவர்களைப் பொறுத்தவரையில் ஒரு காரியம் கூடி வரவேண்டுமென்றால் காரிய பூர்த்திக்கான வெளி அம்சமும், உள்ளம்சமுமான இவ்விரண்டுமே நிறைவாக இருக்க வேண்டும். காரியப் பூர்த்தியை அவர் நான்கு கட்டங்களாகப் பிரித்துள்ளார். காரியப் பூர்த்திக்கான உள்ளம்சங்களும் மற்றும் வெளியம்சங்களும் நான்கு வெவ்வேறு விதமாக இணைகின்றன என்பதால் இப்படி நான்கு கட்டங்களை அவர் ஏற்படுத்தி-யிருக்கிறார். முதல் கட்டத்தில் உள் பர்சனாலிட்டியும், வெளி சூழ்நிலைகளும் இரண்டுமே பாஸிட்டிவாக இருப்பதால் முதல் கட்டத்தில் இருப்பவர்கள் எந்த வேலை செய்தாலும் அது கூடிவரும் என்றாகிறது. Graphஆக போட்டால் முதல் கட்டத்தை பாஸிட்டிவ், பாஸிட்டிவ் ++ என்று போடலாம். முதல் கட்டத்தில் இருப்பவர்கள் காரியப் பூர்த்திக்கு மிகவும் உகந்த பர்ஸனாலிட்டி அம்சங்களை வைத்துக் கொண்டிருப்பார்கள். அதாவது கடினமாக உழைக்கும் திறன், வேலையில் முழு ஈடுபாடு, நன்றாக organise செய்யக்கூடிய திறன், வேலையை சிறப்பாகச் செய்யக்கூடிய working skills மற்றும் காரிய பூர்த்திக்கு



உதவக்கூடிய quality, harmony, punctuality, சுத்தம் போன்ற பண்புகளைக் கடைபிடிப்பதில் ஆர்வம் என்றிவையெல்லாம் அவரிடம் காணப்படும். அதே சமயத்தில் வெளி பக்கத்தில் காரிய பூர்த்திக்கு உதவக்கூடிய விஷயங்களான நிறைய முதலீடு, தகுந்த டெக்னாலஜி மற்றும் manpower support மற்றும் வெளி மார்க்கெட் demand என்றிவை எல்லாம் இப்படிப்பட்டவருக்குச் சுலபமாகவும் கிடைக்கின்ற சூழ்நிலையில் அவர் இருப்பார். இப்படி உள்ளேயும் மற்றும் வெளியேயும் இரண்டு பக்கமும் விஷயம் பாஸிட்டிவாக இருப்பதால் இப்படிப்பட்டவர்கள் அவர்களுக்குத் தெரிந்த எந்த வேலையைச் செய்தாலும் கூடிவரும் அளவிற்கு அதிர்ஷ்டசாலிகளாக இருப்பார்கள். இரண்டாவது கட்டத்தில் உள் பர்சனாலிட்டி பாஸிட்டிவாகவும், காரிய பூர்த்திக்கு ஏற்றதாகவும் இருக்கும். ஆனால் வெளி சூழ்நிலைகள் காரிய பூர்த்திக்கு சாதகமாக இருக்காது. வேறு வகையாகச் சொன்னால் இந்தக் கட்டத்தில் இருக்கின்ற நபர் கடின உழைப்பாளியாகவும், திறமைசாலியாகவும், உற்சாகம் நிறைந்தவராகவும், காரிய பூர்த்திக்கு ஏற்ற valuesகளைக் கடைப்பிடிப்பவராகவும் இருப்பார். இருந்தாலும், வெளி சூழலில் போதுமான முதலீடு, மற்றும் manpower, support, market demand போன்ற வெளி சப்போர்ட் அவருக்கு இல்லாமல் இருக்கும். ஆகவே இந்தக் கட்டத்தில் இருப்பவருக்கு உள்ளே பாஸிட்டிவாகவும், வெளியே நெகட்டிவாகவும் இருக்கிறது. இரண்டாம் கட்டத்தை அப்பா பாஸிட்டிவ் மற்றும் நெகட்டிவ் அதாவது ப்ளஸ், மைனஸ் என்று குறிப்பிடுகிறார். இக்கட்டத்தில் இருப்பவர்கள் வேலையை ஆரம்பித்தார்கள் என்றால், பணப்பற்றாக்குறை மற்றும் ஆள் பற்றாக்குறை மற்றும் மார்க்கெட்டில் டிமாண்ட் இல்லாதிருத்தல், இவை போன்ற காரணங்களால் ஆரம்பத்தில் இவர்களுக்குப் பலவிதமான சிரமங்களும், தடைகளும் வரத்தான் செய்யும். இருந்தாலும்

உள் பர்சனாலிட்டி பாஸிட்டிவாக இருப்பதால், இந்தச் சிரமங்கள் மற்றும் இடர்ப்பாடுகளை எல்லாம் முறியடித்து முடிவில் இந்த நபர் வெற்றிகரமாகத், தான் எடுத்துக் கொண்ட வேலையைச் செய்து முடிப்பார். மூன்றாவது கட்டத்தில் உள் பர்சனாலிட்டி வேலை மற்றும் காரியப் பூர்த்திக்கு எதிரானதாக இருக்கும். ஆனால் அதே சமயத்தில் வெளி சூழ்நிலைகள் காரியப் பூர்த்திக்கு சாதகமாக இருக்கும். காரியப் பூர்த்திக்கு எதிரான பர்ஸனாலிட்டி என்றால் இக்கட்டத்தில் இருக்கின்ற நபர் சோம்பேறியாகவும், திறமை குறைந்தவராகவும், வேலையில் ஈடுபாடு இல்லாதவராகவும், work values எதையும் ஏற்றுக் கொள்ளாதவராகவும் இருப்பர். பர்ஸனாலிட்டி இப்படி இருந்தாலும், பணக்காரத் தகப்பனார் அமைந்திருந்தால், இவர் புதிதாக ஏதேனும் ஒரு பிஸினஸ் தொடங்க விரும்பினால், அதற்குத் தேவைப்படுகிற முதலீடு, டெக்னாலஜி, manpower support என்றிவை எல்லாமே அவருடைய தந்தையார் மூலம் அவருக்கு உடனடியாகக் கிடைக்கும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நிறைய முதலீடு மற்றும் ஆள் பலம் இருப்பதால் ஆரம்பத்தில் வேலை நன்றாகவே நடக்கும். இருந்தாலும் நாளடைவில் பர்ஸனாலிட்டி காரிய பூர்த்திக்கு எதிராக இருப்பதால் ஆரம்ப அனுகூலங்களையும் மீறி பர்ஸனாலிட்டி-யின் நெகட்டிவ் அம்சங்கள் வெளிப்பட்டு, வேலை கெட்டு, இறுதியில் தோல்வியைச் சந்திக்க நேரிடும். இந்த மூன்றாவது கட்டத்தை நெகட்டிவ் மற்றும் பாஸிட்டிவ் என்றும், மைனஸ், ப்ளஸ் என்றும் அப்பா குறிப்பிடுகிறார். நான்காவது கட்டத்திற்கு வந்தால், உள் பர்சனாலிட்டியும் சரி, வெளி சூழ்நிலையும் சரி, இவை இரண்டுமே காரிய பூர்த்திக்கு எதிரானவைகளாக இருக்கும். உள்ளேயும் எந்த சிறப்பும் இருக்காது. வெளியேயும் எந்தச் சிறப்பும் இருக்காது. இப்படிப்பட்ட கட்டத்தில் இருப்பவரால் எந்த ஒரு வேலையையும் தொடங்கவே முடியாது. ஆகவே இருப்பதிலேயே மோசமான கட்டம் இதுதான். இந்தக் கட்டத்தை அப்பா அவர்கள் நெகட்டிவ் மற்றும் நெகட்டிவ்,



அதாவது மைனஸ் மற்றும் மைனஸ் என்று குறிப்பிடுகிறார்.

அன்னை அன்பர்களுக்கு இன்னர் பர்சனாலிட்டி பாஸிட்டிவ் ஆகவும், காரிய பூர்த்திக்கு உகந்ததாகவும் இருந்தால் அது ஒன்றே போதும். வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் மற்றும் அதிகபட்சமாக தன்னால் என்ன செய்ய முடியுமோ அதை வெற்றிகரமாகச் செய்ய வேண்டும் என்ற உண்மையான ஆர்வம் இருந்தால் அன்பர்களுக்கு அதுவே போதும். அவர்களுக்குச் சாதகமான வெளிச் சூழ்நிலைகளை அன்னை அவர்களுக்கு அமைத்துக் கொடுத்து, எப்போதுமே அன்பர்கள் பிளஸ் மற்றும் பிளஸ் என்று சொல்லப்-படுகின்ற முதல் கட்டத்திலேயே இருக்கும்படியும் செய்வார். அன்னையின் அருள் எந்நேரமும் backgroundஇல் இருக்கும் என்பதால் அன்பருடைய முயற்சிகளுக்குண்டான பலனை அருள் பல மடங்கு பெரிதாக்கி, ஒன்றுக்கு ஆயிரமாக அன்பர்களுக்குப் பலன் கிடைக்கும்படியும் அருளால் செய்ய முடியும். ஆகவே அன்னைக்கு உகந்த வகையில் இருப்பதும், செயலாற்றுவதும் தான் நம் வேலை. வாழ்க்கை எப்படிப்பட்ட பலனை நமக்குக் கொடுக்கிறது என்பது அன்னையினுடைய வேலை என்று நம்பி நாம் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் இருக்கலாம்.

❋❋❋

**மனத்தை அறிவது மனிதனை அறிவது.**

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XXII. The Problem of Life

All life has a nature. *Page No.209*
It depends on the fundamental poise. *Para No.5*
It is a poise of its own constituting consciousness.
As the consciousness is, so will be the Force.
The consciousness is infinite.
It is one.
It is transcendent of its acts and forms.
It is so even while embracing them.
It is so while informing, organising, executing them.
It is as is the consciousness of Sachchidananda.
So will be the Force.
The Force is infinite in its scope.
One in its works.
Transcendent in its power.
Equally so will be its self-knowledge.



## 22. வாழ்வின் பிரச்சனை

வாழ்வுக்குச் சுபாவமுண்டு.
அது அடிப்படையான நிலைமையைப் பொறுத்துள்ளது.
அந்நிலை அதன் அமைப்பிற்குரிய ஜீவியத்தைப் பொறுத்தது.
ஜீவியம் போல் சக்தியிருக்கும்.
ஜீவியம் அனந்தமானது.
ஜீவியம் ஒன்றானது.
அது தன் செயல்கள், ரூபத்தைக் கடந்தது.
அவற்றைத் தழுவும் பொழுது கடந்து நிற்கிறது.
அவற்றிற்கு விவரம் தெரிவித்து, அமைத்து, செயல்படுத்தும் பொழுதும் ஜீவியம் அவற்றைக் கடந்துள்ளது.
சச்சிதானந்தம் போலவே ஜீவியமும் செயல்படும்.
சக்தியும் அதே போல் கடந்திருக்கும்.
சக்தி அனந்தமாகும்.
செயலில் ஒன்றியிருக்கும்.
அதன் பவர் கடந்து நிற்கும்.
தன்னையறிவதும் அதே போலிருக்கும்.

The consciousness is like that of material nature.
It is submerged.
It is self-oblivious.
It drives along in the drift.
It is its own Force without knowing it.
It really determines the drift.
It drives the drift.
It is its very nature.
There is an eternal relationship.
It is between the two terms.
So will be the Force.
It will be a monstrous movement.
It is Inert and Inconscient.
It is unaware of what it contains.
It seems mechanically to fulfil itself.
It is by a sort of inexorable accident.
It is an inevitably happy chance.
All the while it really obeys.
Even while it obeys the law faultlessly.
It is a law of Right and Truth.
It is fixed for it by the will of Conscious-Being.
It is a supernal Being.
It is concealed within the movement.
Consciousness is divided in itself.
It is so in Mind.
It limits itself.
It is so in various centres.



ஜீவியம் ஜட சுபாவமாக இருக்கிறது.
அது மூழ்கியுள்ளது.
தன்னை மறந்தது.
ஓட்டத்தில் அடித்துக் கொண்டு போகிறது.
தன்னுடைய சக்தியின் ஓட்டம் அது. அதை அது அறியாது.
அவ்வோட்டத்தை அதுவே நிர்ணயிக்கிறது.
அந்த ஓட்டத்தை அதுவே ஓட்டுகிறது.
அதுவே அதன் சுபாவம்.
நிரந்தரமான தொடர்புண்டு.
ஓட்டமும் அதை ஓட்டுவதும் அவ்விரு அம்சங்கள்.
சக்தியும் ஓட்டத்தைப் போன்றது.
அது அசுர ஓட்டம்.
அது ஜடம், தன்னையறியாதது.
தன்னிடம் உள்ளதை அது அறியாது.
இயந்திரம் போல் தன்னைப் பூர்த்தி செய்து கொள்கிறது.
தவிர்க்க முடியாத நிகழ்ச்சி போன்றது.
தவிர்க்க முடியாத சந்தோஷ சந்தர்ப்பம்.
எந்த நேரமும் பணிகிறது.
சட்டத்தைக் குறையின்றி ஏற்றுப் பணிகிறது.
அது சத்தியமான சரியான சட்டம்.
சத் புருஷனின் உறுதியால் நிர்ணயிக்கப்பட்ட சட்டமிது.
அது உச்ச கட்ட ஜீவன்.
அந்த ஜீவன் ஓட்டத்தில் மறைந்துள்ளான்.
ஜீவியம் பிளந்து பிரிவுபட்டுள்ளது.
மனத்தில் அது போன்றது.
அது அளவுக்குட்பட்டது.
பல மையங்களில் அது பிரிந்துள்ளது.

It sets each to fulfil itself.
It has no knowledge of what is there in the others.
It does not know of its relation to others.
They are apparently divided.
They are opposed.
They are so to each other.
Not so in their unity.
Such will be the Force.
It will be life like that we are.
The life around us.
It will be a clash.
It is of the intertwining of individual lives.
Each seeks in the other its own fulfilment.
They do not know their relations with others.
It is a conflict of divided forces.
They are opposing and differing forces.
They mix in the mentality.
It is a shock and wrestle.
It is an insecure combination of divided ideas.
They are opposing divergent ideas.
They cannot arrive at knowledge.
It is a knowledge of their necessity.
It is necessary to each other.
They grasp their place as elements of that Unity.

It is behind.
It is expressing through the divided ideas.



ஒவ்வொரு மையமும் தன்னைப் பூர்த்தி செய்து கொள்கிறது.
மற்ற மையங்களில் என்னயிருக்கிறது என அறியாது.
மற்ற மையங்களுடன் என்ன தொடர்புண்டு என அறியாது.
அவை பிரிந்து தோன்றுகின்றன.
அவை எதிரானவையாகத் தோன்றுகின்றன.
ஒன்றுக்கொன்று எதிரானவை.
அடிப்படை ஒற்றுமையில் அப்படியில்லை.
சக்தியும் அப்படியிருக்கும்.
அது நம் வாழ்வு போன்றது.
அது நம்மைச் சுற்றியுள்ள வாழ்வு போலாகும்.
அது ஒரு பிணக்காக இருக்கும்.
அது தனி மனித வாழ்வு சேர்ந்து இணைவதாகும்.
அடுத்ததில் தன் பூர்த்தியை ஒவ்வொன்றும் நாடுகிறது.
மற்றவற்றுடன் தன் தொடர்பை அவை அறியா.
பிரிந்த சக்தியின் பிணக்கு அவை.
அவை எதிரான வேறுபட்ட சக்திகள்.
மனப்போக்கில் அவை கலக்கின்றன.
அது அதிர்ச்சி, போராட்டம்.
அது நிலையற்ற பிரிந்த எண்ணங்களின் சேர்க்கை.
அவை விலகிப் போகும் எதிரான எண்ணங்கள்.
அவை ஞானத்தை எட்ட முடியாது.
அது தேவையான ஞானம்.
ஒவ்வொருவருக்கும் தேவையான ஞானமது.
அந்த ஐக்கியத்தின் அம்சங்களாக அதைப் பற்றிக் கொள்கின்றன.
ஐக்கியம் பின்னணியில் உள்ளது.
பிரிந்த எண்ணங்கள் மூலம் ஐக்கியம் வெளிப்படுகிறது.

There the discords must cease.
Consciousness can possess diversity and Unity.
The latter contains the former.
It governs it.
Here it is aware of the Law.
Law, Truth, right of All are included in it.
It includes the Right of the individual.
The two become consciously harmonised.
They do so in mutual unity.
The whole nature of the consciousness is the One.
It is their knowing as One.
There the One knows itself as the Many.
The Many know themselves as One.
There the force also will be of the same nature.
It will be a Life that consciously obeys the law of Unity.
And yet fulfils each thing in diversity.

It is according to its proper rule and function.
It will be a life in which all the individuals live.
They live at once in themselves and in each other.
They live as one conscious Being in many souls.
It is one power of Consciousness in many minds.
It is one joy of Force working in many lives.
One reality of Delight in many hearts.



எல்லாப் பிணக்கும் அங்கு அழியும்.
ஜீவியம் ஐக்கியத்தையும் பிரிவினையும் உடையது.
ஐக்கியம் பிரிவினையை உட்கொண்டது.
அதைத் தன்னுட்கொண்டு ஆள்கிறது.
இந்நிலையில் அது சட்டத்தையறியும்.
அதனுள் சட்டம், சத்தியம், அனைவர் உரிமையும் உள்ளன.
இது தனி மனித உரிமையையும் உட்கொண்டது.
இரண்டும் தெரிந்து சுமுகமாகின்றன.
பரஸ்பரம் ஐக்கியமாக அவை சுமுகமாகின்றன.
ஜீவியத்தின் முழு சுபாவமும் பரமாத்மாவாகும்.
அது தன்னை அப்படி அறியும்.
பரமாத்மா தன்னை ஜீவாத்மாவாக அறியும்.
ஜீவாத்மாக்கள் தம்மை பரமாத்மாவாக அறியும்.
சக்தியும் அங்கு அதே சுபாவமாகும்.
வாழ்வு தன்னையறிந்து ஐக்கியச் சட்டத்திற்குப் பணியும்.

இருப்பினும் பலவற்றுள்ளும் ஒவ்வொன்றும் தம்மைப் பூர்த்தி செய்து கொள்கின்றன.
அது சட்டப்படி செயல்படி நிறைவேறுகிறது.
எல்லா ஜீவாத்மாக்களும் வாழும் வாழ்வு அது.
ஒவ்வொருவரும் பிறரிலும் தன்னிலும் வாழ்கின்றனர்.
ஒரு சத்புருஷன் பல ஆத்மாக்களில் வாழ்கிறார்.
ஜீவியத்தின் ஒரே பவர் பல மனங்களில் உறைகிறது.
ஒரே ஆனந்தம் பல வாழ்வில் உள்ளது.
ஒரே ஆனந்தத்தின் சத்தியம் பல இதயங்களில் செயல்படுகிறது.

There are four positions. *Page No.211*

The first is the source of all this progressive relation. *Para No.6*

It is a poise in the being of Sachchidananda.

It is a relation between consciousness and Force.

For there the Force is consciousness of being.

It works itself out.

It does so without ever ceasing to be consciousness.

And the consciousness is similarly luminous Force of being.

It is eternally aware of itself.

It is eternally aware of its own Delight.

It never ceases to be this power.

It is a power of utter light.

It is a power of self-possession.

There is a second relationship.

It is of material Nature.

It is a poise of Being.

It is a poise in the material Nature.

It is a great denial of Sachchidananda by Himself.

Here there is utter separation.

It is apparent.

Force is separated from consciousness.

It is a specious miracle.

It is a miracle of all governing.



இவற்றுள் நான்கு நிலைகள் உள்ளன.

முதல் நிலை இந்த வளர்ச்சிக்கு உற்பத்தி ஸ்தானம்.

அது சச்சிதானந்தத்துள் உள்ள நிலை.

அது ஜீவியத்திற்கும் சக்திக்குமுள்ள உறவு.

அங்கு சக்தி ஜீவனின் ஜீவியம்.

அது தன்னை செயலாக மாற்றுகிறது.

அந்நிலையில் சக்தி ஜீவியமாகவேயிருக்கிறது.

அதே போல் ஜீவியம் ஒளிமயமான ஜீவனின் சக்தியாக இருக்கிறது.

என்றும் அது தன்னையறியும்.

அது தன்னை நிரந்தரமாக ஆனந்தமாக அறியும்.

ஜீவியம் இந்தச் சக்தியை இழப்பதேயில்லை.

அது முழுவதும் ஒளிமயமான சக்தி.

அது தன்னைத் தான் ஆட்கொள்ளும் சக்தி.

இரண்டாம் நிலையுண்டு.

அது ஜடமான இயற்கை.

அது ஜீவனின் நிலை.

ஜீவனும் சக்தியும் ஜடத்தில் - ஜட உலகில் - கொண்டுள்ள தொடர்பு அது.

சச்சிதானந்தம் தன்னையே மறுக்கும் நிலை அது.

இங்கு இரண்டும் முழுவதும் பிரிந்துள்ளது.

பிரிந்தது தோற்றம்.

சக்தி ஜீவியத்திலிருந்து பிரிகிறது.

அது அதிசயமான தோற்றம்.

அது ஆட்சி செய்யும் சக்தியின் அதிசயம்.

It is an infallible inconscient.
It is only a mask.
Modern knowledge has mistaken it for the real face of cosmic Deity.
There is a third relation.
It is a poise of being in Mind and in the Life.
We see it emerging out of this denial.
It is struggling.
There is no possibility of submission.
Submission is possible if the struggle ceases.
But it has a clear knowledge.
Or it is an instinct.
It is of a victorious solution.
It is a perplexing apparition of man.
It is out of the half-potent conscient being.
It is a being out of the omnipotent Inconscient.
It is of the material universe.
The fourth relation is the poise of being in Supermind.
It is a fulfilled existence.
The total denial creates a problem.
It is because of a partial affirmation.
It emerges out of the denial.
It needs to be solved.
There is one possible way.
It is complete affirmation.
It fulfilled all that was secret.



அது பிழையறியாத ஜட ஜீவியம்.
அது ஒரு முகமூடி.
இக்கால விஞ்ஞானம் அதைப் பிரபஞ்ச தெய்வத்தின் வன்மையான முகம் எனக் கொள்கிறது.
மூன்றாம் நிலையொன்றுள்ளது.
ஜீவன் மனத்திலும் வாழ்விலும் உள்ள நிலையிது.
இந்த மறுப்பிலிருந்து எழுவது அது.
அது போராடுகிறது.
பணியும் சந்தர்ப்பமில்லை.
போராட்டம் நின்றால் பணிவு முடியும்.
ஆனால் அதற்குத் தெளிந்த ஞானமுண்டு.
அந்த ஞானம் உணர்ச்சி.
நிச்சயமாக வெல்வோம் என்ற உள்ளுணர்வு அது.
திகைப்பூட்டும் மனிதப் பிசாசின் தோற்றமிது.
பாதி உயிருள்ள ஜீவனிலிருந்து அது வெளி வருகிறது.
எல்லாம்வல்ல ஜட ஜீவியத்திலிருந்து எழும் ஜீவனது.
அது ஜடப்பிரபஞ்சம்.
நான்காம் நிலை சத்தியஜீவியத்தில் ஜீவிய நிலை.

அது வாழ்வு பூர்த்தியடைந்த நிலை.
முழுமறுப்பு ஒரு பிரச்சனையை ஏற்படுத்துகிறது.
பகுதியான வலியுறுத்தலால் அது வருகிறது.
அது மறுப்பால் எழுகிறது.
அதைத் தீர்க்க வேண்டும்.
அதற்கு ஒரு வழியுண்டு.
முழுமையான வலியுறுத்துதல் வழி.
ஒளிந்துள்ளதை முழுமைப்படுத்தும் தீர்வு அது.

It is in the potentiality.
Beind the denial, it is there.
It is a great denial.
It is intended by the evolution.
That is the real life.
It is the life of the real Man.
Man's life is partial.
Manhood is partial and unfulfilled.
Manhood is striving forward.
It has a perfect knowledge.
It has guidance.
It is in the so called Inconscient.
It is within us.
We have a conscient part.
It has a dim vision.
It is a prevision.
It has fragments of realisation.
It has glimpses of the ideal.
The poet, the prophet, the seer, the transcendentalist have it.
The mystic and the thinker have it.
The great intellects have it.
The great souls of humanity do have it.

*Contd....*

❋❋❋



அது வித்தாக உளது.
அது மறுப்பின் பின் இருக்கிறது.
மறுப்பு பெரும் மறுப்பு.
பரிணாமம் அதை நாடுகிறது.
அதுவே உண்மையான வாழ்வு.
உண்மையான மனிதனின் வாழ்வு அது.
மனித வாழ்வு பகுதியானது.
மனிதத்தன்மை பகுதியானது, முழு நிறைவு பெற்றதில்லை.
மனித குலம் முயன்று முன்னேறுகிறது.
அதற்குச் சிறந்த ஞானம் உண்டு.
வழிகாட்டியும் உண்டு.
ஜட ஜீவியம் என நாம் அழைப்பது வழிகாட்டுகிறது.
அது நம்முள் உறைகிறது.
நாம் அறிந்த பகுதியுண்டு.
அதன் பார்வை மங்கலானது.
அது எதிர்காலத்தை அறியும்.
சித்தியில் சிதறிய சிறு பகுதிகளுண்டு.
இலட்சியம் அதற்குத் தட்டுப்படும்.
கவி, தீர்க்கதரிசி, ரிஷி, உலகைக் கடந்தவன் அவற்றைப் பெற்றுள்ளான்.
அறிஞனும், மாயத்தை நாடுபவனும் அதை அறிவான்.
பெரும் அறிஞர்கள் பெற்ற பேறு அது.
மனித குல மேதைகள் பெற்றது அது.

*தொடரும்......*

❋❋❋

## *இம்மாதச் செய்தி*

**கெட்ட சகுனம்**

**நல்ல சகுனமாக மாறும்**

**காலம் இது.**



# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

**53. எது நடக்கலாம் என்பதை அறிவதுடன், எது நடக்கும் என அறியும் திறமை.**

- ★ என்ன நடக்கலாம் எனப் பலரும் கூற முடியும்.
- ★ **என்ன நடக்கும் என்பதை அறுதியிட்டுத் திட்டவட்டமாக எவராலும் கூற முடியாது.**
- ★ அதற்கு முதற் காரணம், நாம் கூறுவதால் அது மாறக் கூடியது.
- ★ வீட்டிலிருந்து புறப்பட்டவர் வருகிறேன் எனப் போனில் சொன்னால் அவரை எதிர்பார்க்கலாம்.
- ★ 99 பங்கு அவர் சொன்னபடி வருவார்.
- ★ 1 பங்கு ஏதோ காரணத்தால் வீட்டிலிருந்து புறப்பட்டபின் மனம் மாறி வராமலிருக்கலாம்.
- ★ அன்பர் மாடியில் நின்று கொண்டிருந்தார்.
- ★ மைத்துனிக்குப் பார்த்த வரன் வாரம் ஒரு முறை அவரை வந்து சந்திப்பது வழக்கம்.
- ★ அவர் கீழே படியேறுவதை அன்பர் கண்டார்.
- ★ மனைவியை டிபன் செய்யச் சொல்லிக் கொண்டேயிறங்கி வந்தார்.
- ★ வந்தவர் இளைஞரை எதிர்பார்த்து ஏமாந்தார்.
- ★ தெருவில் வந்து பார்த்தார் காணவில்லை.
- ★ **எதிர்பார்த்தால் எதிர்பார்ப்பது நிகழ்ச்சி நடப்பதைத் தடுக்கும்.**
- ★ நடக்கக்கூடியதை மனம் கூறும்.

- ★ தடையில்லாமல், தவிர்க்க முடியாதபடி நடக்கக் கூடியதைக் கூறுவது சத்தியஜீவியம்.
- ★ காரியங்கள் நடைபெறுமுன் சூட்சும உலகில் உருவாகின்றன.
- ★ சத்தியஜீவியம் அதைக் காண்கிறது. அதனால் அதைத் திட்டவட்டமாகக் கூற முடிகிறது.
- ★ சில சமயம் என்ன நடக்கும் எனத் தெரிந்து, சொல்லாமலிருந்தால், நடக்கும்.
- ★ வெளிநாட்டு அன்பர் அடுத்த 5 நிமிஷத்தில் போனில் கூப்பிடுவார் எனக் கூறியது அப்படி ஒரு முறை நடந்தது.
- ★ **எந்த அன்பருக்கு இதுபோல் எதிர்காலம் தெரிகிறதோ, அவருக்கு யோகம் பலிக்கும்.**
- ★ ஒவ்வொரு முறையும் பலிக்க வேண்டுவதில்லை. ஒரு சில சமயம் பலித்தாலும் நடக்கும்.
- ★ அன்பர் புதுவை வரும் வழியில் நின்று கொண்டிருந்த நண்பரைக் கண்டு நின்றார்.
- ★ அவருடன் நண்பர் ஒருவரிருந்தார்.
- ★ பஸ் ஸ்டாண்டிற்கு எதிரிலிருப்பதால் எங்கு போகிறீர்கள் என விசாரித்தார்.
- ★ ஆசிரமம் போவதாகக் கூறினார்கள். நண்பருக்கு அதுவே முதல் முறை.
- ★ ''இந்த நாளைக் குறித்து வைத்து அடுத்த ஆண்டு நினைவுபடுத்தினால் உங்கள் நிலை இரு மடங்காகியிருக்கும்'' என்று அன்பர் கூறினார்.
- ★ அடுத்த ஆண்டு இருவரும் அதே தினம் அன்பரைப் பார்க்க வந்தனர்.
- ★ இம்முறை புதியதாக வந்த நண்பர் பேசினார்.



*''எனக்கு ஷாப், லுங்கி வியாபாரம், நிலம், சாயக்கிடங்கு, வட்டிக்கடையென 9 ஸ்தாபனங்கள் உள்ளன. அவை 9உம் சென்ற ஆண்டைவிட இரு மடங்காகின. அவை தவிர 1 ஏக்கர் தென்னந்தோப்புண்டு. அது மட்டும் மாறவில்லை, காய் திருட்டுப்போகிறது'' என்றார்.*

- ★ அன்பர் திருட்டை நிறுத்த வழி கூறினார்.
- ★ எதிர்காலம் அனுபவமுள்ளவர்க்குப் பொதுவாகத் தெரியும்.
- ★ அது பெரும்பாலும் நடக்கும்.
- ★ யோகம் ஒருவருக்குப் பலிக்கும் நேரம் வந்துவிட்டால் அவருக்குத் தெரியும் எதிர்காலம் தவறாமல் பலிக்கும்.

**அப்படிப்பட்டவர் வாயால் கூறியதாலேயே அது தவறாமல் நடக்கும்.**

*தொடரும்.....*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கருத்தைக் கடந்தது காவியம்.

சாவித்திரி ஆன்மாவின் காவியம்.

காலத்தைக் கடந்த கருத்தை காவியம் என்கிறோம்.

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

241. *உழுகிற நாளில் ஊருக்குப் போய், அறுக்கிற நாளில் அரிவாள் கொண்டு வந்தது போல.*

**உழுகிற நாளில் உள்ளே போய் அறுக்கிற நாளில் வெளியே வந்தால் அதிர்ஷ்டம் உள்ளும் புறமும் நிறையும்.**

242. *கஞ்சி கண்ட இடம் கைலாசம். சோறு கண்ட இடம் சொர்க்கம்.*

**நினைவிருந்தால் நிதர்சனம்.**
**அழைப்பிருந்தால் அருள்மயமான அதிர்ஷ்டம்.**

243. *சூடு கண்ட பூனை அடுப்பங்கரையில் சேராது.*

**சூடு கண்ட பூனை அடுப்பங்கரை சூட்டை அழிக்கும்.**

244. *குறையச் சொல்லி நிறைய அள.*

**குறையச் சொல்வதும் நிறைவு.**
**நிறையச் சொன்னாலும் பெரு நிறைவு.**

245. *அரைக்காசை ஆயிரம் பொன்னாக்குகிறவளும் பெண்சாதி. ஆயிரம் பொன்னை அரைக்காசு ஆக்குகிறவளும் பெண்சாதி.*

**பெண்சாதியைப் பெண் தெய்வமாக அறிந்தால், அரைக் காசெல்லாம் ஆயிரம் பொன்னாகும்.**

*தொடரும்....*

❀❀❀



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

✡ **எது உண்டு**

★ வெளிநாட்டாருக்கு விசா வேண்டும்.

நம் நாட்டாருக்கு அது தேவையில்லை.

*“உனக்கு இல்லாதது இல்லை. நீ எடுத்துக்கொள்ளாதது உண்டு”.*

*அதுவே அன்னையிடம் அனைவருக்கும் உண்டு.*

*தகுதி தம் மனத்தைப் பொருத்தது.*

உன் உரிமையை அன்பாக, அழகாக, உயர்வாக, பெருந்தன்மையின் சிகரமாக உணர்ந்து எடுத்துக் கொண்டால் அது உன் உறவுக்குரிய யோக சித்தி.

உரிமையை எடுத்துக் கொள்ள எல்லா உரிமையையும் விட்டவரால்தான் முடியும்.

உரிமையை விடும் உள்ளம் உலகத்தினளவுக்குப் பரந்து விரியும்.

உரிமை புனிதம்.

அதை விடுவது ஆத்மானுபவம்.

உரிமையை எடுத்துக் கொள்வது பிறருக்கு உயர்ந்த உரிமையைக் கொடுப்பது.

தவறான உரிமையை தயக்கமில்லாமல் எடுத்துக் கொள்ள பெருமைப்பட உலகுக்கு இதுவரை இல்லாத உரிமையைத் தருபவரால்தான் முடியும்.

மனைவியைவிட மகிமை பொருந்திய நிலை கணவ-னுக்கில்லை.

மனைவியை அன்பால் வழிபடுவது இறைவனுக்குப் பக்தியைச் சமர்ப்பணம் செய்வது.

உறவு என்பது பிள்ளைகளிடம் பாசமாகவும் (physical), நண்பர்களிடம் நட்பாகவும் (vital), உலகத்துடன் (mental), மனத்தாலும், அறிவாலும் கொள்வது அறிவு.

ஆன்மீக உறவு உண்மையானது. அது மனத்தில் ஆரம்பித்து உணர்வால் கனிந்து, உடலில் சமர்ப்பணத்தால் பூர்த்தியாகும். அந்நிலையில் நினைவு தொடுவது போலிருக்கும்.

### ✡ குறை கூறுவது, ஆதரவு தருவது

★ கோள் சொல்லும் பழக்கம் உள்ளவரிடம் நாம் அடுத்தவர் சொல்லிய கோளைப் பற்றிப் பேசுதல் அர்த்தமுள்ள-தாகாது.

★ அவரிடம் இல்லாத குறையை அவரிடம் சொல்லிக் கொள்வது அர்த்தப்படும்.

★ உள்ள குறையை விட்டுவிட்டால் (e.g.பொறாமை, சின்ன புத்தி) அடுத்தவருடைய பொறாமையைப் பற்றி நாம் அவரிடம் கூறுவது உலகில் பொறாமை அழிய உதவும்.

உடன் வேலை செய்தவர் என் மீது பொறாமைப்படுகிறார் என அவரைப் போன்றவரிடம் சொல்வது உலகில் பொறாமை வளர உதவும்.

கேட்பவர் பொறாமையில்லாதவரானாலும், இருந்த பொறாமையை விட்டுவிட்டவரானாலும், அவரிடம் உடன் வேலை செய்தவர் பொறாமையைச் சொன்னால், உலகில் பொறாமை ஓரிழை குறையும்.



நம்மிடம் உள்ள குறைகளை நாம் அழித்தால், நம்மிடம் வரும் குறைகள் உலகில் குறையும்.

★ இது குழந்தை வளர்க்கும் தகுதியைத் தரும்.

ஒரு குழந்தை தன் குறைகளைத் தாயாரிடம் கூறினால் அக்குறை அக்குழந்தையை விட்டுப்போவது அவளைத் தாயார் ஸ்தானத்திற்குத் தகுதியுள்ளவராக்கும்.

★ மனிதத் தன்மை அவசியம். அது வாராமல் நாகரீகம், நல்ல குணம் வாராது. அது இல்லாதவனை விலங்காகக் கருதுவது பயன் தரும்.

★ குறை கூறுவதற்கும் இடம் சரியாக இருந்தால் நல்ல பலன் உண்டு.

★ எதை எவரிடம் சொல்வது எனில், எதையும் எவரிடமும் சொல்ல முடியாது எனப் பதில் வரும்.

### ✡ நிலையான ஆனந்தம்

★ Objectless ananda in the objects.

பார்வை கண்ணுக்கு மட்டும் உரியது.

உடலில் எல்லா பகுதிகட்கும் பார்வையுண்டா?

எண்ண - counting - மனம் அறியும். கை எண்ணுமா?

54 பேப்பர் வேண்டுமானால் எடுத்தால் 54 பேப்பர் வந்தால் விரலே எண்ணிற்று என ஆகும்.

ஆனந்தம் மின்னல் போல் எழும். நிலையாக வானில் மின்னல் நிற்காது.

ஆனந்தம் ஜடத்துள் எழுந்தால் மின்னல் நிலையானது போலாகும்.

எல்லா புடவைகளும் பட்டுப்புடவையானது போலாகும்.

தவம், யோகம் என்பது ஆனந்தத்தை எட்டித் தொடும், நிஷ்டையில் பெறுவது ஆனந்தம்.

ஸ்ரீ அரவிந்தம் ஆனந்தம் நம்மை நாடி வந்து உடலில் புகுந்து நிலைப்பது.

ஒன்று நாம் பிரதமரைப் போய்ப் பார்ப்பது.

அடுத்தது பிரதமர் நம் வீட்டில் தங்கி நாட்டை ஆள்வது.

அதுவே பூரண யோகம்.

மற்ற யோகத்தில் மனிதன் இறைவனையடைகிறான்.

இந்த யோகத்தில் மனிதன் இறைவனாகிறான்.

வாழ்வில் மனிதன் வெற்றியை நாடுகிறான். இங்கு அதிர்ஷ்டம் அன்றாட வெற்றியாக மனிதனை நாடுகிறது.

✡ **வீடு சிறியது, கடுகு**
**வீடு கோயில் - எல்லாம் நாம் முடிவு செய்வது**
**வீடே (*Mother's Ashram*) அன்னை ஆசிரமம்**

முதல் தலைமுறை பாடுபட்டு உழைக்கும், பொறுப்பானது.

இரண்டாம் தலைமுறை பொறுப்பற்றது, சோம்பேறி, இஷ்டப்படி நடக்கும்.

குடும்பங்கள் உயர்வது முதல் தலைமுறையின் உழைப்பாலோ, இரண்டாம் தலைமுறையின் போக்காலோ, மூன்றாம் தலைமுறை உணர்வதாலோ அல்ல.

*குடும்பம் உயர்வது பண்பால்.*

வேலை என்பது உடல் ஏற்கும் பண்பு.

இனிய பழக்கம் உயிரின் பண்பு.



வேலையை அறிவுடன் செய்வது மனம் போற்றும் பண்பு.

உடலின் பண்பும், உயிரின் பண்பும், அறிவின் பண்பும் பண்பாவதற்கு அடிப்படையான காரணம். இதர பண்புகளான *நேர்மை, விஸ்வாசம், நாணயம், பகுத்தறிவு, நிதானம், அடக்கம்.*

*பண்புகள் குடும்பப் பரம்பரையினின்று எழுகின்றன.*

குடும்பம் பண்புடையதாக இல்லாவிட்டால், அன்னை எந்தப் பண்பையும் தருவார்.

*பெற்றோர் அன்னையைப் பிள்ளைகட்குத் தர, பெற்றோருக்கு அன்னை வாழ்வில் நிதர்சனமாக இருக்க வேண்டும்.* அதற்குப் பணமோ, அந்தஸ்தோ, பண்போ இணையாகாது.

- ★ எதுவும் அழியும்.
- ★ அன்னை அழியாமல் நிலையாக இருப்பார்.
- ★ எதையும் அழிய அன்னை அனுமதிக்கமாட்டார்.

பில்கேட்ஸ் $ 64 பில்லியன் சம்பாதித்து பிள்ளைகட்கு $ 300 மில்லியன் மட்டுமே கொடுத்தார். (Rs. 256,000 கோடியில் Rs. 1200 கோடி). மீதியைத் தானம் செய்துவிட்டார். அன்னை தைரியலக்ஷ்மி. அன்னையிருந்தால் அனைத்தும் வரும். மற்றது இருந்தால் நாமே முனைந்து காப்பாற்ற வேண்டும்.

***அன்னை மட்டுமே சொத்து.***
***பிள்ளைகட்கு நாம் தரும் பெரிய சொத்து***
***அன்னை மீதுள்ள நம்பிக்கை.***

✡ **யார் எக்காரணத்தை முன்னிட்டுக் கோபமாக இருந்தாலும் நாம் சரியில்லை எனப் பொருள்**

நாம் என்பது "நான்" என்ற ஒருவரை நாம் கருதுகிறோம்.

நாம் என்பது மனிதன், மனித குலம். அதன் பிரதிநிதியான "நான்" என்பவர், குளத்தில் நாம் ஒரு இடத்தில் குளித்தால் நம் உடலின் வியாதி எல்லாத் தண்ணீரையும் பாதிக்கும்.

★ ஒரு மனிதன் அனைவரையும் உட்கொண்ட மனிதன்.

இதைப் புறக்கணித்து நான் கோபப்படுகிறேன் என்கிறோம்.

இதற்குப் பதிலாக, கோபத்தை மனித குலத்துள் நான் அனுமதிக்கிறேன் என அறிய வேண்டும்.

ஒரு தொட்டியில் ஒரு துவாரம், தண்ணீர் காலியாக உதவும்.

ஆனால் எல்லா துவாரமும் அடைபட்டால்தான் தண்ணீரைப் பாதுகாக்கலாம்.

மனித குலத்துள் ஒருவர் ஒரு உணர்ச்சியை அனுமதிக்-கலாம். ஒருவரே ஒரு உணர்ச்சியை அழிக்கலாம் என்பது சத்தியஜீவிய அமைப்பு. அது உலகிலில்லை. அதனால் உதாரணம் கொடுக்க இயலாது. அனைவரும் ஒருவருள், ஒருவர் அனைவருள்ளும் (All is in each, each is in all) என்பதால் இந்நிலை ஏற்படுகிறது. 1943இல் சிப்பாய்கள் சென்னை வந்தனர். சொறி, சிரங்கு தமிழ்நாடு முழுவதும் அவர்கள் மூலம் பரவியது. 1914இல் ஜப்பானில் விஷ ஜுரம் வந்து அன்னைக்கு வந்தது. அன்னை உடலை அது தொட்டவுடன் ஜப்பானை விட்டே அந்த ஜுரம் நிரந்தரமாகப் போய்விட்டது.

தொடரும்....

❋❋❋

**அறிவில்லை என அறிவது ஞானம்.**



# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**II/50) முரண்பாடு இருளை இழந்து உடன்பாடாகும்பொழுது ஜோதி உற்பத்தியாகும் சிந்தனை காட்சியாகிறது - ரிஷி.**

☆ **சிந்தனை காட்சியாக முனிவர் ரிஷியாக வேண்டும்.**

- ஒரு கருத்து உடைந்து எதிராகவோ, பிணக்காகவோ ஆனால் எழுவது இருள்.
- ஜோதி ஒரு செயலின் ஆன்மீக விரிவு.
- ஒரு செயல் தன் போக்கை ஆன்மாவை நோக்கித் திருப்பும் பொழுது எழுவது ஒளி.
- அதே செயல் பிரிந்து, உடைந்து, வழி மாறி, எதிரானால், அதன் போக்கு ஆன்மாவுக்கு எதிராகும்.
- பிணக்கொழிந்தது சத்தியம்.
- மலிந்த பிணக்கு இருள் மலிந்த பொய்.
- சத்தியம் ஆன்மாவின் புறம்.
- சத் அகமும் புறமுமாகப் பிரியும் பொழுது அகம் ஆன்மாவாகவும், புறம் சத்தியமாகவுமாகும்.
- ஆன்மாவினின்று எழுந்த சத்தியத்தில் பிணக்கில்லாதது ஆச்சரியப்படுவதற்கல்ல.
- எண்ணம் பிணக்காவது முரண்பாடு.
- பிணக்கொழிந்தால் எண்ணம் சிந்தனையாகும்.
- சிந்தனை ஒருமையையும், ஒற்றுமையையும் நாடும்.
- ஒருமையை நாடும் சிந்தனை தர்க்கரீதியாக இருக்கும்.

❁ அறிவுக்கும், தர்க்கத்திற்கும் பொருந்தும் எண்ணம் பிரபஞ்சத்தைக் கடந்த பிரம்மத்தை நாடவல்லது.

❁ இது ஒளி வளரும் பாதை.

❁ எதிரானது இருள் வளரும் பாதை.

❁ இருள் வளர்ந்தால் அறிவு, வாழ்வாகும்.

❁ இருள் மலிந்தால் வாழ்வு ஜடமாகும்.

❁ ஜடம் பிணக்கும், இருளும் மலிந்த லோகமாகும்.

❁ அறிவுள்ள ஒருவர் படித்தவர் பலரிடையே அறிவு விளக்கம் பெறும்படிப் பேசினால் கேட்பவர் மனம் மலரும், அறிவு தெளிவுறும், முகம் பிரகாசமாகும்.

❁ அறிவற்ற ஒருவன் அவன் அறிந்தவற்றை ஆர்வமாக அடித்துப் பேசினால் கேட்பவர் அறிவு குறைந்தவர்களானால், எதையும் ஏற்க முடியாமல், எதுவும் புரியாமல், விளங்காமல், விளக்கம் கேட்கவும் முடியாமல் திணறி, திக்குமுக்காடி மனத்தில் பிணக்கெழுந்து இருளை உற்பத்தி செய்பவர் முகம் இருளடையும்.

❁ இருள் அறியாமை.

❁ பிணக்கு இருள்.

❁ வலியுறுத்துவது வன்முறை.

❁ இருளையும் பிணக்கையும் வற்புறுத்தும் வன்முறை அறியாமையை அறிவாகக் கொள்ளுதல்.

❁ ஞானத்திற்குச் சிந்தனையே இருள்.

❁ சிந்தனை இருளை இழந்தால் அது ஜோதியாகி உருவம் பெறும்.

❁ அப்படி எழும் உருவம் திருஷ்டி.

❁ அதைக் காண்பவர் ரிஷி.



❁ ரிஷி என்ற சொல்லுக்குத் திருஷ்டியுடையவர் எனப் பொருள்.

❁ அத்திருஷ்டி வெளியிலும், சுவரிலும், ஆகாயத்திலும், மனத்திலும் எழும்.

✵✵✵

## II/51) ஜோதியும் தடை. நேரடி ஞானம் வந்தால் ஜோதி மறையும் - யோகி.

✫ **காட்சியைக் கடந்த யோகி.**

❁ பிற பொருளை அறிவது அறிவு, ஞானம் எனப்படும்.

❁ மனிதன் தன் புலன்களால் - கண், காது, மூக்கு, வாய், கை - பிற பொருளை அறிகிறான்.

❁ அது மனம் அறிவதில்லை.

❁ மனத்தின் கருவியான புலன்கள் அறிவது.

❁ ஒரு வகுப்பு (attendance register) மாணவர் வருகைப் பதிவில் எல்லா மாணவர் பெயரும் இருக்கும். பெயர் மாணவராகாது.

❁ புலன்கள் அறிவது மாணவர் பட்டியலை அறிவது போலாகும்.

❁ மனம் அறிய புலன்கள் கூறியவை அகல வேண்டும்.

❁ மாணவர் பட்டியலை எட்ட வைத்து வகுப்புக்குள் நுழைந்து மாணவர்களைக் காண்பது மனம் நேரடியாக அறிவதாகும்.

❁ மனிதன் இதுவரை மனத்தால் அறிந்தவனிலன், புலன்களாலேயே உலகை அறிகிறான்.

❁ மனம் புலன்களை விலக்கி நேரடியாக அறிய சிந்தனை வேண்டும்.

❁ மனம் சிந்தனையால் அறிகிறது.

❁ சிந்தனை என்றால் என்ன?

❁ சிந்திக்க முதற்கட்டம் புலன் உணர்வை விட்டகல வேண்டும்.

கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய், தீர விசாரிப்பதே மெய் என்பது புலனை விலக்கி அறிவை சிந்தனையால் நாடு என்பதாகும்.

❁ மனிதன் அறிவால், சிந்தனையால் உலகை மறைமுகமாகக் கண்ணாடியில் காண்பது போல் காண்கிறான்.

❁ முனிவர் மனித மனம் போலவே உலகை அறிகிறார்.

❁ அவர் சிந்தனையால் மனிதன் போல் அறிவதில்லை. மௌனத்தால் அறிகிறார்.

❁ ரிஷி காட்சியால் ஞான திருஷ்டியால் அறிகிறார்.

❁ யோகிக்குச் சிந்தனை, மௌனம், ஜோதி தேவையில்லை. அவர் உலகை நேரடியாக அறிகிறார். அதை (intuition) நேரடி ஞானம் என்பது ஆன்மீக பாஷை.

❁ அன்பர்கள் தியானத்தில் மௌனம் பெறுகிறார்கள்.

❁ சிந்தனையால் நெடுநாட்களில் விளங்குவது மௌனத்தால் உடனே விளங்கும்.

❁ மௌனம் முதிர்ச்சியடைந்தால் விலகும் திருஷ்டி ஏற்படும்.

❁ எந்த (course) கோர்ஸில் சேர்வது எனத் தெளிவில்லாத பொழுது தியானம் மௌனத்தாலோ திருஷ்டியாலோ தெரிவிக்கும்.

தியானத்தில் ஒரு கட்டடம் தெரியும்.

அன்றே வரும் தபாலில் அது மெடிகல் காலேஜ் கட்டடம் என படம் அறிவிக்கும்.

பையனை மெடிக்கல் காலேஜில் சேர்க்கலாம்.

❁ தியானமே இல்லாமல் அன்பர்கள் விழிப்பில் கண்ட காட்சிகள் அநேகம்.



❁ மனத்தில் சத்தியம் வலுவானால் - சத்தியம் ஆன்மாவின் புறம் - கற்பனையில் ஒரு எண்ணம் பலித்தால், கற்பனை ஜீவன் கொடுத்ததாலேயே நடைமுறையில் அது நடக்கும்.

❁ மெடிகல் காலேஜில் சேரும் வசதியில்லாதவனுக்குக் கற்பனையில் மெடிக்கல் காலேஜ் பலித்தால் மெடிக்கல் காலேஜில் சேரும் வாய்ப்பு எழுந்து பலிக்கும்.

❁ மகான்கள், அவதார புருஷர்கள் கண்ட கனவுகள் நனவாகின.

❁ வள்ளலார் வடலூரைக் கனவில் கடலூராகக் கண்டார்.

❁ 100 ஆண்டுகட்குப்பின் அது நிதர்சனமாயிற்று.

✡✡✡

**II/52) அறியாமையால் பாதிக்கப்படாமல் - ஞானத்தைச் சேர்த்துச் செயல்படும் திறனை மனம் பெற்று - சத்தியம் மனத்தைக் கரைத்து, தானிழந்த சத்தியஜீவிய தொடர்பைப் பெற முடிகிறது - தெய்வம்.**

☆ **அறியாமை தெய்வத்தை அசைக்காது.**

❁ சிவன், விஷ்ணு, பிரம்மா, இந்திரன், லக்ஷ்மி, காளி, போன்ற தெய்வங்கள் உறையும் லோகம் தெய்வீக மனம்.

❁ தெய்வீக மனம் ஞானமுடையது. அது ஞானத்தைத் தேட வேண்டாம்.

***ஞானத்துடன் அங்கு அஞ்ஞானமும் உண்டு.***
***அஞ்ஞானத்தை விலக்கி,***
***ஞானம் பலன் தரும் வகையில் தெய்வீக மனம்***
***செயல்படும்.***

❁ தெய்வீக மனம் கிருஷ்ணாவதாரம் பிறந்த லோகம்.

- தெய்வீக மனம் பிரபஞ்சம் முழுவதும் பரவுவது.
- தெய்வீக மனம் எல்லா மதங்களையும் ஏற்கும், விலக்காது.
- அடிப்படையான ஐக்கியத்தை செயல்படுத்தாவிட்டாலும், தெய்வீக மனம் அதை அறியும்.
- அது சத்தியஜீவியத்தின் பிரதிநிதி.
- சத்தியஜீவியத்தினின்று வேறுபட்டு, அதன் பிரதிநிதியானது தெய்வீக மனம்.
- *Pride and Prejudice*இல் சத்தியஜீவிய சக்தியின் சாயல் தெரிகிறது.
- பிரெஞ்சுப் புரட்சி இமயமலையில் பகவான் ஸ்ரீ அரவிந்தர் முற்பிறவியில் எழுப்பியது.
- அது ஆத்மீகப் புரட்சியில்லை, அறிவுடைப் புரட்சி என்கிறார்.
- வரும் வாய்ப்பை ஏற்க மறுத்தால் உள்ளதும் போகும் என்பது அன்னை வாக்கு.
- B.A. பட்டம் பெற்றவன் M.A. பட்டம் பெறும் வாய்ப்பை மறுத்தால் B.A.யும் போகும் என்பதை மனம் ஏற்காது.
- B.A. படித்தவனுக்கு வரும் வாய்ப்பு சமூக வாய்ப்பு.
- செல்வாக்குள்ள நாட்டாண்மைக்காரருக்கு பஞ்சாயத்து தலைமை வருவது எலக்ஷன் வாய்ப்பு. அது M.L.A., M.P. ஆக உதவும். தொடர்ந்து வளரும் வாய்ப்பு.
- நாட்டாண்மைக்காரர் வாய்ப்பை மறுத்தால் வேறொருவன் அதைப் பெற்று மீண்டும் M.L.A. ஆனால் அதன்பின் மரியாதை புதியவருக்குப் போகும். ஏற்கனவே நாட்டாண்மைக்காரர் செய்த வேலைகளை, மத்தியஸ்தம் போன்றவை, ஊர் விவகாரங்கள் இனி M.L.A.க்கும் புதிய பஞ்சாயத்து தலைவருக்கும் போகும்.

*உள்ளதும் போகும்.*



- ஜீவனற்ற வாழ்வில் வாய்ப்பை இழக்கலாம்.

  வளரும் வாழ்வில் வருவதை ஏற்காவிட்டால் உள்ளதும் போகும்.
- தெய்வீக மனம் கிருஷ்ண பரமாத்மாவுக்குரியது. அவர் நடத்திய பாரதப் போர் உலகப் பிரசித்தியானது. பகவான் ஸ்ரீ அரவிந்தர் தெய்வீக மனத்தைக் கூறியவற்றை மனதில் கொண்டு பாரதத்தைப் படித்தால் அதன் உண்மை விளங்கும். பாரதத்தைப் படித்தால் வீட்டில் கலகம் வரும் என்பதால் பெரியவர்கள் அதைப் படிக்க அனுமதிப்பதில்லை.

***

## II/53) மனம் தன் ஆதியை அடைகிறது - சத்தியஜீவியம்.

☆ **அறியாமையை அறிவாக்கும் ஆதி சத்தியஜீவியம்.**

- சிருஷ்டியை வேதம் விளக்கப் பயன்படுத்தியது - ஞானம், அஞ்ஞானம்.
- வேதம் அதை சித்தி, அசித்தி என்றது.
- உபநிஷதம் சிருஷ்டியை விளக்கப் பயன்படுத்தியது - ஞானம், அஞ்ஞானம்.
- உபநிஷதம் அதை வித்யா, அவித்யா என்றது.
- பகவான் ஸ்ரீ அரவிந்தர் சிருஷ்டியை விளக்கப் பயன்படுத்தியதும் அதுவே.

*பகவான் அதை ஞானம், அஞ்ஞானம் என்றார்.*

- எவரும் சிருஷ்டியை சத்தியம், பொய்; வலிமை, எளிமை; அன்பு, வெறுப்பு; அழகு, விகாரம்; ஆனந்தம், நிரானந்தம் என்பதன் மூலம் விளக்கவில்லை.

- ஏன் அப்படி அனைவரும் செய்தனர்?
- பகவான் மனம் சிருஷ்டியின் முடிவு என்கிறார்.
- வாழ்வும், ஜடமும் மனம் சிருஷ்டித்தவையே, மூலமான சிருஷ்டியின் பகுதிகளில்லை என்கிறார்.
- மனம் மேல் உலகையும், கீழ் உலகையும் இணைப்பது.
- மனமே இவ்விளக்கங்கட்கு மையமானது.
- மனம் தத்துவங்களின் மையமாக இருப்பதால் சிருஷ்டியை வேதம், உபநிஷதம், பகவான் ஸ்ரீ அரவிந்தர் ஞானம், அஞ்ஞானம் மூலம் கூறுகின்றனர்.
- மனிதன் மனத்திலிருந்து சத்தியஜீவியத்திற்கு எழுவதற்கு முனிவர், ரிஷி, யோகி, அவதாரம் மூலம் உயர்கிறான்.
- மனம் சத்தியஜீவியத்தினின்று எழுந்தது.
- சத்தியஜீவியம் இரண்டாகப் பிரிவதால் அவற்றிடையே மனம் எழுந்தது.
- உபநிஷதம் அவற்றை பிரக்ஞா, ஹிரண்ய கர்ப்பம் என்கிறது.
- பகவான் கூறுவதும் அவற்றையே என்றாலும், அவர் அப்பெயர்களைப் பயன்படுத்தவில்லை.
- பகவான் அவற்றைக் காலத்தைக் கடந்த சத்தியஜீவியம், காலத்துள் சத்தியஜீவியம் என்கிறார்.
- ஜீவாத்மாவை பகவான் individual divine மனித பிரம்மம் என்பது எதனால் என்றால் மரபில் ஜீவாத்மா அழியக் கூடியது.

  பகவானுக்கு ஜீவாத்மா பிரபஞ்சத்தையும், பிரம்மத்தையும் உட்கொண்டது.
- மனம் உற்பத்தியானபொழுது அது தெய்வீக மனம் divine mindஆக இருக்கிறது. சத்தியஜீவிய முழுப் பார்வை இரண்டாகப் பிரிந்துள்ளது.



- அதில் அஞ்ஞானம் இல்லை. மனம் விரும்பி அஞ்ஞானத்தை ஏற்படுத்துகிறது.
- மனம், வாழ்வு, ஜடத்திலும் ஆரம்பத்தில் அஞ்ஞானமில்லை.
- மனம் சத்தியஜீவியத்தை அடைவதும், அறியாமை ஞானத்தையடைவதும், மனம் தன் ஆதியை அடைவதாகும்.

*தொடரும்....*

❃❃❃

## ஸ்ரீ அரவிந்த சுடர்

போக வேண்டியது உள்ளே.

இருக்க வேண்டியது உள்ளே.

சாதிக்க வேண்டியது உள்ளே.

உன் உலகம் உள்ளே இருக்கிறது.

உள்ளே சாதிக்காதது உலகத்தில் சாதிக்கப் போவதில்லை.

உனக்குரியது உள்ளேயிருக்கிறது.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உள்ளே மாற ஒரு க்ஷணம்.

வெளியே மாற ஒரு யுகம்.

# குறுக்கு வழி

சமர்ப்பணன்

பொன்னுலகம் ஒன்றை கவிதை மூலம் படைக்கும் முயற்சியில் சிந்தனைக்கடலில் மூழ்கி, முத்துக்களை எடுத்து நான் சொல்லச் சொல்ல என் ஒரே ரசிகையான ஆனந்தி எழுதிக் கொண்டிருந்தபோது, வெங்கட்டிடமிருந்து போன் வந்தது.

சினிமாப் பாடல்களை வெங்கட் பாடுவதைக் கேட்டுவிட்டு, அவன் அம்மா, "நீ அற்புதமாகப் பாடுகிறாய்" என்று சொல்லி வைக்க, அன்றிலிருந்து திரை இசை உலகத்திற்கும், அவன் நண்பர்களுக்கும் கேடு காலம் பிடித்துவிட்டது. யாரைப் பார்த்தாலும் நான்கைந்து பாடல்கள் பாடிக் காட்டாமல் விடமாட்டான். அவனிடமிருந்து தப்பித்துக்கொள்ள "பிரமாதம், பிரமாதம்" என்று எல்லோரும் புகழவும், சில நாட்களாக சினிமாவில் பாட வாய்ப்பு தேடிக் கொண்டிருந்தான்.

"சந்துரு, நான் கேள்விப்பட்டது உண்மைதானா?" என்று பரபரப்பான குரலில் கேட்டான் வெங்கட். "நீ என்ன கேள்விப்பட்டாய் என்பதை முதலில் சொல்" என்றேன்.

"கவி மன்னர் காவியதாசனை உனக்கு நன்றாகத் தெரியுமாமே? இதை நீ என்னிடம் முன்பே சொல்லி இருக்கக் கூடாதா? அவரும் இசையமைப்பாளர் மெல்லிசை அரசர் விஸ்வமூர்த்தியும் நெருங்கிய நண்பர்கள் ஆயிற்றே! காவியதாசன் மூலம் விஸ்வமூர்த்தியைப் பிடித்து, நான் சினிமாவில் பாடி இருப்பேனே" என்றான் வெங்கட்.

"அது சுத்தப் புரளி. நான் காவியதாசனை ஒரு முறைகூட நேரில் பார்த்தது இல்லை. அவர் என் சிநேகிதி ஆனந்தியின்



தூரத்து சொந்தக்காரர். அவ்வளவுதான் தெரியும்" என்றேன்.

"அடப்பாவி, அது போதாதா நமக்கு? இதோ இப்போதே வாடகைக் கார் எடுத்துக் கொண்டு வருகிறேன். நாம் ஆனந்தியைப் போய் பார்க்கலாம்" என்று கூறிவிட்டு என் பதிலை எதிர்பார்க்காமல் வெங்கட் போனை வைத்துவிட்டான். எங்கே நான் மறுத்துப் பேசிவிடுவேனோ என்ற பயம்போலும்.

என் முகவாட்டத்தைக் கவனித்த ஆனந்தி, "போனில் யார் பேசினார்கள் சந்துரு? என்ன பிரச்சனை?" என்று கேட்டாள்.

"விஸ்வமூர்த்தி இசையமைப்பில் சினிமாவில் பாட உன் மாமா காவியதாசனின் சிபாரிசு வெங்கட்டிற்கு வேண்டுமாம்" என்றேன்.

"தாராளமாகச் செய்யலாமே" என்றாள் ஆனந்தி.

"என்ன செய்யலாமே? இவனெல்லாம் பாடகனா? ஆசை இருந்தால் போதுமா? திறமை வேண்டாமா?" என்று கேட்டேன்.

"திறமை யாரிடமிருந்தாலும் விஸ்வமூர்த்தி நிமிடத்தில் கண்டுபிடித்துவிடுவார்" என்றாள் ஆனந்தி.

சிறிது நேர மௌனத்திற்குப் பின், "ஆனந்தி" என்றேன்.

"அவளுக்கு என்னவாம்?" என்று கேட்டாள் ஆனந்தி.

"என் மனதில் இருப்பதை சொல்லிவிடுகிறேன். காவியதாசனுக்கு இலக்கியம், அரசியல், சினிமா என்று எல்லா இடங்களிலும் நல்ல செல்வாக்கு இருக்கிறது. அவர் உதவியைக் கொண்டு பல விஷயங்களை எனக்காகச் செய்து கொள்ளலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறேன். அவரிடம் வெங்கட்டிற்கு சிபாரிசு வாங்கிவிட்டால், நாளை என் தேவைக்கு நான் என்ன செய்வது?" என்று ஆனந்தியிடம் மனதில் உள்ளதை உள்ளபடி சொன்னேன்.

"இதுதான் பிரச்சனையா?" என்று கேட்டு புன்னகைத்த ஆனந்தி, "காவியதாசன் மிகவும் நல்லவர். எத்தனை முறை கேட்டாலும் உதவுவார்" என்றாள்.

“அதற்காக நாம் எத்தனை முறை அவரிடம் வெட்க-மில்லாமல் போய் நிற்பது? தனக்கு மிஞ்சிதான் தான, தர்மம் என்பது உனக்குத் தெரியாதா?” என்று கேட்டேன்.

“நாம் கொஞ்சம் வித்தியாசமாக யோசிக்கலாமே, பிறருக்கு மிஞ்சியதுதான் நமக்கு வரவேண்டும் என்று நினைத்தால் என்னவாம்?” என்று கேட்டாள் ஆனந்தி.

“எனக்கு இருக்கும் ஒரே நல்ல வாய்ப்பை அவனுக்குத் தந்துவிட்டால் நான் என்ன செய்வது?” என்றேன்.

“கவிஞரின் உறவு மட்டும்தானா நமக்கு வாய்ப்பு? வாழ்வும், உலகமும் எவ்வளவு பெரியவை! அவற்றில் நமக்கு எத்தனையோ வாய்ப்புகள் உண்டு” என்றாள் ஆனந்தி.

“பார்வைக்குத் தெரியாத பலாக்காயைவிட கையில் இருக்கும் களாக்காய் மேலானது” என்றேன்.

“சந்துரு, கொடுப்பதில் இருக்கும் இன்பம் பெறுவதில் இருக்கும் இன்பத்தைவிட பல மடங்கு அதிகமானது. நாம் பொதுவாக யாருக்கும் எதையும் கொடுப்பதில்லை. அப்படியே கொடுத்தாலும், ஏதோ ஒரு நிர்பந்தத்தின் காரணமாகவோ, அல்லது அதன் மூலம் நமக்கு ஒரு இலாபம் வரும் என்ற கணக்கின் காரணமாகவோதான் கொடுக்கிறோம். அதனால்தான் நமக்குக் கொடுப்பதில் இருக்கும் இன்பத்தைப் பற்றி தெரியவில்லை” என்றாள் ஆனந்தி.

“நீ பணக்காரி. மற்றவருக்கு எவ்வளவு கொடுத்தாலும் உன்னிடம் கோடிகோடியாக மீதமிருக்கும். அதனால் தைரியமாகத் தத்துவம் பேசலாம். என்னைப் போன்ற அன்னக்காவடிகள் இருப்பதைப் பத்திரப்படுத்திக் கொள்வதுதான் பிழைக்கும் வழி. கல்யாண விருந்தில் முதல் பந்தியில் சாப்பிடுவதுதான் புத்திசாலித்தனம். மற்றவர்கள் சாப்பிட்டு முடித்த பின்னால் நான் சாப்பிடுகிறேன் என்றால், நீர்மோரும், ஊறுகாயும்தான் மிஞ்சும். அதுகூட சந்தேகம்தான்” என்றேன்.



“இப்படி எல்லாவற்றிலும் கணக்கு பார்ப்பதாலும், தவறு நடக்கும் என்று நம்புவதாலும்தான் எல்லாமே குறையாக இருக்கிறது” என்று அலுத்துக் கொண்டாள் ஆனந்தி.

“அடுத்தவருக்கு நாமாகப் போய் உதவினால் உபத்திரவம் தான் வரும்” என்றேன்.

“நல்ல மனதோடு, வாய்விட்டு உதவி கேட்டவர்களுக்கு நம்மால் முடிந்தவரை உதவி செய்வதில் தவறில்லையே? உதவுகிறோமோ இல்லையோ, குறைந்தபட்சம் எல்லோருக்கும் நன்மை கிடைக்கட்டும் என்ற நல்லெண்ணத்தையாவது வளர்த்துக் கொள்ளலாமே!” என்றாள் ஆனந்தி.

“பிறருக்கு நல்லெண்ணத்தைத் தருவதா? அது எப்பேர்பட்ட கஷ்டமான காரியம் என்று உனக்குத் தெரியாது. மற்றவர்கள் நம்மை மிஞ்சிவிட்டால் என்ன செய்வது?” என்று சொல்லிவிட்டு சிறிது நேரம் யோசித்தேன். “எனக்கு என்ன புரிந்தது என்று சொல்கிறேன். நீ இது எனக்கு ஏற்கனவே சொன்னதுதான். ‘அடுத்தவர்களுக்கு முதலில் நன்மை வரட்டும், எனக்கு கடைசியாக வரட்டும்’ என்று உண்மையாக இருந்தால், பொறுமை வளரும். தான் என்ற பகுதியிலிருந்து நம் உலகம் என்ற முழுமைக்கு மாறுவோம். சுமுகம் வளரும். சுயநலம் குறைந்து, பரநலம் விரும்புவதால், நம் ஜீவியம் விரிந்து வளரும். ஜீவியம் வளர்ந்தால் வாழ்க்கை தவறாமல் பலன் தந்துவிடும், சரிதானே?” என்று கேட்டேன்.

“சரிதான். அடுத்தவர்களுக்கு அதிர்ஷ்டம் வரவேண்டும் என்று மனமார வேண்டினால் நமக்கு அதிர்ஷ்டம் வந்துவிடும். அதிர்ஷ்டத்தை அடைய அதுதான் குறுக்கு வழி” என்றாள் அருமை ஆனந்தி.

“குறுக்கு வழி எனக்கு மிகவும் பிடிக்கும். நீ எப்போதும் நல்லதுதான் சொல்வாய். உன் மேல் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. அதனால், ‘போனால் போகிறது, இந்த உருப்படாத

வெங்கட்டிற்கு அதிர்ஷ்டம் வரட்டும்' என்று நினைத்துக் கொண்டு, அவனுக்கு உதவ சம்மதிக்கிறேன்" என்றேன்.

"அப்படி வாருங்கள் வழிக்கு. நாம் பிறருக்கு உதவும் போது, அவரிடம் நாம் உதவி பெறுவது போல பணிவாக நடந்து கொள்ள வேண்டும்'' என்ற ஆனந்தி, உடனே காவியதாசனுக்குப் போன் செய்தாள்.

காவியதாசன் நல்வாக்கு தந்தார். விஸ்வமூர்த்தி ராகினி ஸ்டுடியோவில் அன்று முழுவதும் இருப்பார் என்றும், உடனே நேரில் சென்று அவரைப் பார்க்கும்படியும், தாம் அவரிடம் விஷயத்தை சொல்லிவிடுவதாகவும் கூறினார்.

சற்று நேரத்தில் என் அலுவலகத்திற்கு வந்த வெங்கட்டிற்கு அப்போதே தான் எல்லா பிரபலமான பாடகர்களையும் புறங்கண்டுவிட்டது போலவும், இந்தியத் திரை இசை உலகமே தன் நுனிநாக்கு அசைவதற்குக் காத்திருப்பது போலவும் நினைப்பு வந்துவிட்டது.

''ஆனந்தி மட்டும் இல்லை என்றால் இந்த இசை-யமைப்பாளரைப் பார்ப்பதற்கு நாம் மாதக்கணக்கில் ஸ்டுடியோ வாசலில் தவம் இருந்திருக்க வேண்டும். அவளுக்கு ஒரு வார்த்தை நன்றி சொன்னாயா?" காரில் ஸ்டுடியோவிற்கு நானும், வெங்கட்டும் போய்க் கொண்டிருந்தபோது அவனிடம் கேட்டேன். ''நீ ஏனப்பா இப்படி கோபித்துக் கொள்கிறாய்? ஆனந்தியே ஒன்றும் சொல்லவில்லை. எனக்கு விஸ்வமூர்த்தியைப் பார்க்கப்போவதை நினைத்தால் ஒரே படபடப்பாக இருக்கிறது'' என்றான் வெங்கட்.

அவன் படபடப்பு விஸ்வமூர்த்தியின் எளிமையும், உற்சாகமும் நிறைந்த வரவேற்பில் அடங்கிவிட்டது. விஸ்வமூர்த்தி வெள்ளை வெளேர் என்ற சட்டை, வேட்டி அணிந்து, விபூதி, சந்தன, குங்குமப் பொட்டுகள் துலங்க கம்பீரமான குரலில் பேசினார்.



"நீங்கள் இரண்டு பேரும் காவியதாசனின் அபிமானி-களோ? உங்களைப் பற்றி ஒரேயடியாகப் புகழ்ந்து தள்ளிவிட்டாரே!" என்றார் விஸ்வமூர்த்தி.

"அவருக்கு மிகவும் பெரிய மனம் சார், எங்கள் இருவரையும் அவர் பார்த்ததுகூட இல்லை!" என்றேன்.

உரக்க சிரித்த விஸ்வமூர்த்தி, ''அவர் அப்படித்தான். சரி, உங்களில் யார் பாடப்போவது?" என்று கேட்டபடி ஆர்மோனியப் பெட்டியில் கை வைத்தார்.

''நான்தான் சார்'' என்றான் வெங்கட்.

''என் முன்னால் இப்படி உட்காருங்கள். என்ன பாட்டு பாடப்போகிறீர்கள்?'' என்று கேட்டார் விஸ்வமூர்த்தி.

''பாலமுரளி கிருஷ்ணா பாடிய 'ஒரு நாள் போதுமா...' பாட்டைப் பாடப்போகிறேன் சார்'' என்றான் வெங்கட். அவனது முன்யோசனையற்ற செயலை என்னவென்று சொல்வது! அது விஸ்வமூர்த்தியின் போட்டியாளர் இசை அமைத்திருந்த பாடல்.

"பிரமாதமான பாட்டு, ஆனால் பாடுவது மிகவும் சிரமம். உங்களுக்கு குரு யார்?" என்று கேட்டார் விஸ்வமூர்த்தி.

''எனக்கு குரு என்று யாருமில்லை. ரேடியோவில் பாட்டு கேட்டு நானாகவே பழகிக்கொண்டேன் சார்'' குரலில் பெருமை பொங்கி வழிய பதில் சொன்னான் வெங்கட்.

''சுயம்புவா? பலே, பலே. சரி, இந்தப் பாட்டை எந்தக் கட்டையில் பாடப்போகிறீர்கள்?'' ஆர்மோனியத்தை மெல்ல வாசித்துக்கொண்டே கேட்டார் விஸ்வமூர்த்தி.

''கட்டையா? அப்படி என்றால் என்ன? ராகம், பாவம், சுருதி பற்றி பலர் பேசிக்கொள்வதைக் கேட்டிருக்கிறேன். அதிலெல்லாம் எனக்கு ஈடுபாடு இல்லை'' என்று சொன்னான் வெங்கட். நான் திடுக்கிட்டுப்போனேன்.

''சரி, நீங்கள் பாடுங்கள்'' என்றார் விஸ்வமூர்த்தி. அவர் கண்ஜாடை காட்டியதும் ஒருவர் தபேலா வாசிக்க ஆரம்பித்தார்.

வெங்கட் பாடிய அந்த நான்கு நிமிடங்கள் நானும், விஸ்வமூர்த்தியும் நரகத்தில் வாழ்ந்தோம். பல இடங்களில் தாளம் தப்பியது, மெட்டு தவறியது, குரல் கோணலாகி பிசிறு தட்டியது, நாக்கு தடுமாறியது, சுருதி விலகியது, வார்த்தைகள் மாறின, மூச்சு வாங்கியது. இசையைப் பற்றி ஒன்றும் தெரியாத எனக்கே அவன் மோசமாகப் பாடினான் என்பது புரிந்தது.

''நல்ல முயற்சி. தம்பி, நன்றாகப் பாடினீர்கள். கஷ்டமான பாட்டு என்பதால் அங்கிங்கே இலேசாக சின்னச் சின்னப் பிரச்சனைகள் இருந்தாலும் நன்றாகவே பாடினீர்கள்'' என்றார் விஸ்வமூர்த்தி. அவரது பெருந்தன்மை எனக்கு நெகிழ்ச்சியைத் தந்தது. ''நன்றி சார். பாலமுரளி கிருஷ்ணாவின் பாட்டை அப்படியே பாட வேண்டாம் என்று நினைத்து, பல மாறுதல்கள் செய்து பாடினேன். அதனால்தான் உங்களுக்கு வேறு மாதிரி தோன்றி இருக்கிறது. இன்னொரு பாட்டு பாடட்டுமா சார்?'' என்று வெங்கட் ஆர்வத்துடன் கேட்டான்.

கைக்கடிகாரத்தை ஒரு முறை பார்த்துக் கொண்ட விஸ்வமூர்த்தி, ''ஏற்கனவே வெளிவந்துவிட்ட பாடல்களைத் திரும்பப் பாடுவது சுலபம். சினிமா பாடகனுக்கு இசை-யமைப்பாளர் சொல்லிக் கொடுக்கும் இதுவரை வெளிவராத புதுப் பாட்டை தனக்குள் வாங்கிக்கொண்டு, அவர் எதிர்பார்க்கும்படி பாடும் திறமை வேண்டும். சினிமா பாட்டு என்றால் காதல் பாட்டுதான் என்றாகிவிட்டது. நான் ஒரு இனிய மெட்டு சொல்கிறேன். அதை அழகாகப் பாடிக்காட்டுங்கள்" என்று கூறினார். பின் சிறிது நேரம் கண்களை மூடி யோசித்துவிட்டு, ஒரு புது மெட்டை தத்தகாரத்தில், ''தான தான தான'' என்று தன் கம்பீரமான குரலில் சொன்னார். கூடவே ஆர்மோனியம் கொஞ்சியது.

''எனக்குப் புரியவில்லையே சார். தான தானா என்றால் எப்படி சார் பாடுவது? எனக்கு வார்த்தைகளோடு பாடித்தான் பழக்கம்'' என்றான் வெங்கட். 'என்னப்பா இது?' என்பதுபோல



என்னை ஒரு பார்வை பார்த்தார் விஸ்வமூர்த்தி.

''வெங்கட் தம்பி, கோவிந்தராசன் என்பவரின் விலாசத்தை உங்களுக்குத் தருகிறேன். அந்த வாத்தியாரை பார்த்து, நான் அனுப்பினேன் என்று சொல்லுங்கள். சினிமாவில் பாட என்னவெல்லாம் வேண்டுமோ அதையெல்லாம் உங்களுக்குச் சொல்லித் தருவார். நீங்கள் தயாராகிவிட்டீர்கள் என்று அவர் சொன்னதும் என்னை வந்து பாருங்கள். அப்போது உங்களை எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமோ அப்படிப் பயன்படுத்திக் கொள்கிறேன்'' என்றார் விஸ்வமூர்த்தி.

''மிகவும் நன்றி சார்'' என்று சந்தோஷமாகச் சொன்னான் வெங்கட். கோவிந்தராசன் வாத்தியாரை பார்த்து பயிற்சி எடுக்கிறானோ இல்லையோ, தன் வாழ்நாள் இறுதிவரை விஸ்வமூர்த்தியை சந்தித்த அனுபவத்தை ஊரெல்லாம் சொல்லிக் கொண்டு திரியப்போகிறான் என்பது உறுதி.

எனக்குச் சங்கடமாக இருந்தது. அதே சமயம் அவர் சொன்ன சந்தத்திற்கு என்னுள் வார்த்தைகள் உருவாயின.

''சார், இந்த மெட்டுக்கு வார்த்தைகள் சொல்கிறேன், வெங்கட் பாடட்டுமா?'' என்று விஸ்வமூர்த்தியிடம் பணிவாக சொல்லிவிட்டு, இரண்டு வரிகளை அதே மெட்டில் பாடினேன்.

இரண்டு வரிகளையும் பாடிப் பார்த்தார் விஸ்வமூர்த்தி. ''அடே, பிரமாதம், பிரமாதம்! ஒரு இடத்தில்கூட தாளம் தட்டவில்லை. உங்களுக்குப் பாட்டு எழுத வருமா?'' என்று வியப்புடன் கேட்டார். ''கதை, கவிதைகளில் சின்ன வயதிலிருந்தே ஆர்வம் அதிகமுண்டு சார்'' என்றேன்.

''மீதி மெட்டையும் சொல்கிறேன், உங்களால் எழுத முடிகிறதா என்று பாருங்கள்'' என்ற விஸ்வமூர்த்தி கண்களை மூடியவண்ணம் கடகடவென்று மெட்டைச் சொன்னார். அடுத்த ஒரு மணி நேரத்தில் விஸ்வமூர்த்தி முழு திருப்தி அடையும்படி ஒரு புதிய பாடல் உருவாகிவிட்டது.

"சந்துரு, பாட்டு அருமையாக அமைந்துவிட்டது. வேண்டாம் என்று அபசகுனமாகச் சொல்லாமல் முதல் பாட்டிற்கான சன்மானத்தைப் பிடியுங்கள்'' என்ற விஸ்வமூர்த்தி நூறு ரூபாய் நோட்டுக்கட்டு ஒன்றை என் கைகளில் திணித்தார். அவரை வணங்கி, பணிவுடன் அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டேன். "இதுபோல ஆயிரம் மடங்கு நீங்கள் சம்பாதிக்க வேண்டும். பெரிய புகழ் பெற வேண்டும். உங்களுக்கு நான் பாட்டெழுத வாய்ப்புத் தருகிறேன். உங்களிடம் சினிமாவிற்கு ஏற்ற மாதிரி கதைகள் இருந்தால் கொண்டு வாருங்கள். எனக்குத் தெரிந்த தயாரிப்பாளர்களிடம் அறிமுகப்படுத்திவிடுகிறேன்'' என்று ஆசி கூறி, வழி அனுப்பி வைத்தார் விஸ்வமூர்த்தி.

நானும், வெங்கட்டும் உற்சாகமாக ஸ்டுடியோவை விட்டு வெளியே வந்தோம். எதிர்காலத்தைப் பற்றி பல திட்டங்கள் போட்டுக் கொண்டு பேசியபடி வந்தோம். திடீரென்று, "ஏனப்பா, இனிமேல் உனக்கு இலட்சக்கணக்கான இரசிகர்கள் கிடைத்துவிடுவார்கள். ஆனந்தி இல்லை என்றால் உனக்கு இந்த வாய்ப்பு கிடைத்திருக்குமா? உடனே ஒரு போன் பண்ணி நன்றி சொல்லத் தோன்றியதா உனக்கு?'' என்று என்னைப் பார்த்து வெங்கட் பழிவாங்குவது போலக் கேட்டான்.

நியாயமான கேள்விதான்.

*முற்றும்.*

❃❃❃

### ஜீவிய மணி

பிறருக்கு அளிப்பது,
நாம் அதிகமாகப் பெறுவது.





## *Page 40* To be perfect as He is perfect is the condition of this integral attainment

## இறைவன் எவ்வளவு சிறப்பாக இருக்கிறானோ அவ்வளவு சிறப்பாக இருப்பதே நிபந்தனை

- நம்மால் இறைவனை ஏற்க முடியும், அவன் சிருஷ்டியை ஏற்க முடியாது.
- ஆடு பகை, குட்டி உறவா என்பது பழமொழி. ஆடு உறவு, குட்டி பகை சரியாகுமா?
- சிருஷ்டி இறைவனுடையது. ஏன் நம்மால் சிருஷ்டியை ஏற்க முடிவதில்லை.
- சஞ்சீவ ரெட்டி தூய்மையான காந்தியவாதி.
- காந்தீயவாதத்தால் ஜனாதிபதி தேர்தலை இழந்தார்.
- காந்தீயவாதத்தின் தூய்மையால் பத்து ஆண்டு கழித்து போட்டியின்றி ஏகமனதாக ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- கவர்னர் ஷா மீனும், சிகரெட்டும் தரவில்லையென வேலை நீக்கம் செய்யப்பட்டார்.
- சஞ்சீவ ரெட்டி காந்தீயவாதியெனினும் மீன் சாப்பிடுவார், சிகரெட் பிடிப்பார்.
- இது மனித சுபாவம்.
- ஷா காந்தீயவாதி, மீன் சாப்பிடமாட்டார், புகை பிடிக்கமாட்டார்.

- காந்தீயவாதியான கவர்னர் காந்தீயவாதியான ரெட்டிக்கு மீன் தரவில்லை.
- காந்தி மன்னிக்காத குற்றமில்லை, கோட்ஸேயை மன்னித்-தார். தன்னைச் சுட்டவனையே மன்னிப்பது காந்தீயவாதம்.
- ரெட்டியால் சிகரெட் இல்லையென்றதால் ஷாவை மன்னிக்க முடியவில்லை.
- கவர்னர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். மன்னிக்க முடியாத குற்றம்.
- காந்திஜீயைப் பின்பற்றினாலும் அவர் கொள்கைகளைப் பின்பற்ற முடிவதில்லை.
- காந்தீஜியின் காங்கிரஸ் தலைவர்கள் பெரும்பணம் வைத்திருக்கிறார்கள்.
- பாம்பு இறைவனால் சிருஷ்டிக்கப்பட்டது. நாம் அதை அடித்துக் கொல்கிறோம்.
- மாமியார் தான் பார்த்து அழைத்து வந்த மருமகளை ஏற்க முடியவில்லை.
- “எந்த மடையன் உனக்கு வேலை கொடுத்தான்” என்று தான் நியமித்த பியூனை மிரட்டிய ஆபீஸர், ‘‘ஐயாதான்’’ என்ற பதிலை எதிர்பார்க்கவில்லை.
- அறிவற்ற காரியத்தை விரும்பி அறிவின் பெயரால் செய்வது அறிவுடைமையாகுமா?
- அதுவே மனித சுபாவம்.
- உலகம் இறைவனால் சிருஷ்டிக்கப்பட்டது. சர்வம் பிரம்மம்.
- அதனால் நாம் எதையும் வெறுக்கக்கூடாது என்பது ஞானம்.
- மனிதன் இன்று ஒன்று செய்வான்.
- நாளைக்கு அதை மறுப்பான்.
- சுபாவம் தன்னை அறியாது.



- தன்னை அறிவது ஞானம்.
- பக்தி என்பது தன்னை அறியும் மனநிலை.
- இது இறைவனை ஏற்பதாகும்.

❁❁❁

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கருவியை மாற்றினால் புரியாதது புரியும்.

அறிவுக்குப் புரியாதது, பக்திக்குப் புரியும்.

பக்திக்கும் நம்பிக்கைக்கும் ***The Life Divine*** புரியும்.

உடலுக்குப் புரியாதது இல்லை.

உடலுக்குப் புரியும்படி சொல்வது பெரிய ஆத்மாக்கள் கடமை.

அதற்கும் நேரம் வர வேண்டும்.

அந்த நேரத்தையும் வரவழைக்கலாம்.

அவதாரபுருஷனின் உடலுக்குப் புரிந்தால் நேரம் வரும்.

எதற்கும் நேரம் வர வேண்டும் என்பது கடமை. அந்த நேரத்தை வரவழைக்கலாம் என்பதும் உண்மை.

முடியாதது என்பதில்லை.

Volume VIII, 1967, Page 134

**நரகத்தைக் கண்டுபிடித்தது சாத்தான். கார்டினல்கட்கு அது உண்மையல்ல எனத் தெரியும்.**

- ★ தப்பு செய்தால் தண்டனை கிடைக்கும் என்பது உண்மை. அது ஆண்டவன் கொடுக்கும் தண்டனையாகாது.
- ★ சாப்பிடாவிட்டால் உடல் கெட்டுவிடும் என்பதை, டாக்டர் தண்டிப்பார் என்பது சரியாகாது.
- ★ படிக்காவிட்டால் பெயிலாகும் என்பதை ஆசிரியர் பெயிலாக்குவார் என்பதும் உண்மையாகாது.
- ★ உம்மாச்சி கண்ணைக் குத்திவிடும் என்பது குழந்தைகளைப் பெரியோர் மிரட்டும் வகை, உண்மையல்ல.
- ★ நேரத்தில் வரவில்லையெனில் ரயில் போய்விடும் என்பதை ரயில் தண்டிக்கிறது எனக் கூறலாமா?
- ★ சிவன், விஷ்ணு போன்றது கடவுள்கள். காட்டேரி, ஐயனார் என்பவை சிறு தெய்வங்கள்.
- ★ தண்டிப்பது சிறு தெய்வங்கள், இறைவனில்லை, கடவுள்-களில்லை.
- ★ பிரபலமான இடங்களில் முதல் பிரார்த்தனை பலிக்கும். அதன்பின் பிரார்த்தனை பலிக்காது. அத்தெய்வத்தை விட்டு அகன்றால் தண்டனை கிடைக்கும். அவை சிறு தெய்வங்கள்.
- ★ கடமைகளைச் செய்ய பெற்றோர், குருக்கள், மதகுரு போன்றவர் பயன்படுத்திய உபாயங்களிவை.
- ★ நெடுநாள் பழக்கத்தைக் கைவிடும்பொழுதும் மனம் உறுத்துவதாலும் ஏற்படும் தவறு தண்டனையாகாது.
- ★ வீட்டுப்பாடம் எழுதாவிட்டால் சாப்பாடு போடமாட்டேன்



என்று எல்லா வீட்டிலும் கூறமாட்டார்கள். அது மட்டமான வீடு, தண்டிப்பது பாடமில்லை, அன்பில்லாத பெற்றோர்.

- ★ அறுவடை சமயத்தில் பெய்த மழை மகசூலை நாசமாக்கியதை தண்டனை எனக் கூற முடியாது.
- ★ அக்கறையாகப் பயிரிட்டவருக்கு அது போன்ற நஷ்டம் ஏற்படுவதில்லை.
- ★ அக்கறை பாதுகாக்கிறது என்பது உண்மை.
- ★ அக்கறையில்லாவிட்டால் பாதுகாப்பிருக்காது என்பது தண்டனை கிடைக்கும் என மாற்றி மனம் புரிந்து கொள்கிறது.
- ★ சிறிதளவு உண்மை மூடநம்பிக்கையாகப் படிக்காத மக்களிடையே பரவுவது சகஜம்.
- ★ எண்ணெய் தேய்த்துக் கொள்ளாவிடில் உடல் கெட்டுப்போகும் என்பதை உடல் தண்டிக்கும் என்றோ, வாணியன் தண்டனை தருவான் என்றோ புரிந்து கொள்வது உண்மையாகாது.
- ★ பெரும்பாலும் ஜாதகத்தை நம்புகிறவர்கள் அரைகுறை செய்தியை நம்புகிறவர்கள்.
- ★ ஜாதகம் நம்பினால் உண்மை. ஜோஸ்யன் மறைப்பான். ஜாதகம் நேரம் சரியாகக் குறிக்காவிடில் சரியான ஜாதகமாகாது.
- ★ பொதுவான உண்மையைக் குறிப்பான உண்மையாகக் கொள்வது மூடநம்பிக்கை.
- ★ ஜாதகத்தை நம்பாமல் அன்னையை நம்பினால் ஜாதகத்திலுள்ள தவறு நடக்காது.
  ஜாதகத்திலில்லாத நல்லது நடக்கும் என்ற உண்மை அன்பர் அனுபவம்.
- ★ ஜாதகம் நேரப்படி கணிப்பதில்லை. அதுவே சரியான ஜாதகமாகாது.
- ★ தெய்வ பக்தியுள்ளவர்க்கு ஜாதகம் மெய்யல்ல.

❋❋❋

(*'அன்னையின் தரிசனம்'* என்ற நூலிலிருந்து)

# அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

## 6. விட்டுப் போன கடன்

பல சந்தர்ப்பங்களில் நாம் நண்பர்களுக்கு உதவுகின்றோம்; அது போலவே அவர்களும் நமக்கு உதவுகின்றார்கள். நாம் கடன் பெறுகின்றோம்; கொடுக்கின்றோம். சில சமயங்களில் கணிசமான அளவில் கடன் கொடுக்கின்றோம். அதே போலக் கணிசமான பாக்கியையும் வசூல் செய்து விடுகின்றோம். சொற்பத் தொகையாக இருக்குமேயானால், அது கொடுக்கப்பட வேண்டியதாக இருந்தாலும், அதனை மறந்துவிடுகின்றோம். சில சமயங்களில் தொகை கணிசமாக இருந்தால்கூட அதை அலட்சியப்போக்காலோ அல்லது வேண்டும் என்றோ வசூல் செய்யாமல் இருந்துவிடுகின்றோம்; அல்லது வாங்கியதைத் திருப்பிக் கொடுக்காமல் இருந்துவிடுகின்றோம்.

இந்த விஷயத்தில் அன்பர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். கொடுக்க வேண்டிய கடன் ஒரு ரூபாயாக இருந்தால்கூட அதை மறக்காது உரியவரிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அது போலவே வசூல் செய்ய வேண்டிய கடன் மிகச் சிறிய தொகையாக இருந்தாலும், அதைக் கவனமாக வசூல் செய்துவிட வேண்டும். பிறருக்குச் சேர வேண்டியதை நாம் வைத்து இருந்தாலும், நமக்குச் சேர வேண்டியதைப் பிறரிடம் விட்டு வைத்திருந்தாலும், அப்பொருள் நம் அலட்சியப் போக்கால் பாதிக்கப்படுகின்றது. அதனால் நம்மை நாடி வர வேண்டிய பொருட்செல்வம் தடைப்பட்டுப்போகும்.

ஓர் அன்பரின் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சி இதற்கு உதாரணமாக அமைகின்றது.



அந்த அன்பர் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபொழுது ஒரு வங்கியில் கடன் வாங்கி, கல்லூரிக்காகும் செலவைச் சமாளித்து வந்தார். வேலைக்குச் சென்ற பிறகு கடனையும், அதற்கான வட்டியையும் கட்டிவிடுவதாக அவருக்கும், வங்கிக்கும் ஒப்பந்தம். வேலைக்குப் போவதற்கு முன்பே வாங்கிய கடனில் பாதியை அடைத்துவிட்டார் அவர். அவருடைய கல்லூரிப் படிப்பு முடிந்தது. அவர் கையில் பட்டத்தைத் தூக்கிக்கொண்டு வேலை தேடி அலைந்தார். அப்படி ஐந்தாறு வருடங்கள் அலைந்த பிறகு, அவருக்குத் தற்காலிக ஆசிரியர் வேலை கிடைத்தது. மாதங்கள் ஓடின. ஏதோ சம்பளம் வந்தது. ஆனால் அவர் வங்கியில் வாங்கிய கடன் பாக்கியைக் கட்டவில்லை; கட்ட முடியவில்லை.

இந்த நிலையில் ஓராண்டு சென்றது. அவருக்குக் கிடைத்திருந்தது தற்காலிக ஆசிரியர் வேலைதான். ஆனாலும் அவர் அந்த வேலை தொடரும் என்று நினைத்தார். அவர் நினைவில் விழுந்தது ஓர் இடி. திடீரென்று அவரைப் பணியிலிருந்து விடுவித்துவிட்டதாக அரசு உத்தரவு பிறப்பித்துவிட்டது. அவர் அந்தப் பணியில் தொடர்ந்து இருப்பதற்கு வாய்ப்பிருந்தும்கூட, அரசு அந்த வாய்ப்பைத் தருவதற்கு முன்வரவில்லை. ஆனாலும், அவர் விடுவதாக இல்லை. மறுபடியும் தம்மைப் பணியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கோரிக்கைக்கு மேல் கோரிக்கையாக அனுப்பிக் கொண்டிருந்தார். பதில் இல்லை; பணியும் இல்லை.

அவருக்குப் பைத்தியமே பிடித்திருக்க வேண்டும். ஆனால் பிடிக்கவில்லை. அதற்குக் காரணம், அன்னையிடம் அவர் கொண்டிருந்த பக்தி. 'வேலை கிடைக்க வேண்டும்' என்று அன்னையை அனவரதமும் பிரார்த்தித்தார். ஆனால் வேலை கிடைத்தபாடாக இல்லை. இப்படித் துன்பமாகச் சென்ற மாதங்கள் இருபது. அவருக்குக் கணத்திற்குக் கணம் கவலை, குழப்பம்.

எனக்கு அவரைத் தெரியும்; அவருடைய நிலையும் தெரியும். ஒரு நாள் நான் அவரைச் சந்தித்தபோது, ''நீங்கள் அன்னையிடம் வேண்டிக்கொண்ட பிறகும் வேலை இல்லையே! எங்கோ ஒரு தடை இருக்கின்றது. அதனால்தான் வேலை கிடைக்கவில்லை. அதை

அறிந்து நீக்கிவிட்டால் வேலை உடனே கிடைக்கும்'' என்றேன்.

அப்பொழுது அவர் நினைவுகூர்ந்து, தம்முடைய வங்கிக் கடன் பற்றியும், அதில் பாதி செலுத்தப்பட்டிருப்பதையும், மற்றொரு பாதி செலுத்தப்படாமல் இருப்பதையும் கூறினார்.

''அந்தக் கடனை நீங்கள் அடைக்காமல் விட்டதால்தான் உங்களால் பணியில் தொடர்ந்து இருக்க முடியவில்லை; வருவாயும் தடைப்பட்டு நின்றுவிட்டது. வேலை கிடைத்த பிறகு அந்தக் கடனை அடைத்துக் கொள்ளலாம் என்று இருக்க வேண்டாம். உடனே ஏதாவது ஏற்பாடு செய்து, கடனைச் செலுத்திவிடுங்கள். உங்களுக்கு விரைவில் வேலை கிடைக்கும்'' என்றேன்.

அவர் உடனே செயல்பட்டார். எப்படியோ பணத்துக்கு ஏற்பாடு செய்தார். கடன் கொடுத்த வங்கியோடு தொடர்புகொண்டார். கடனை முழுதுமாகத் தீர்க்கத் தயாராக இருந்ததால், வட்டியைத் தள்ளிக் கொடுக்கத் தயாராக இருப்பதாகக் கூறினார் வங்கி அதிகாரி.

அந்த அன்பர், ''வங்கிக்குச் சேர வேண்டிய வட்டியைத் தள்ளிக் கொடுக்க வேண்டாம்'' என்று கூறி, கடன் தொகையையும், வட்டியையும் ஒரு பைசாகூடப் பாக்கி வைக்காமல் செலுத்திவிட்டார்.

அதைச் செலுத்திய ஒன்றரை மாதத்தில் அவருடைய வேலை திரும்பவும் கிடைத்துவிட்டது. 'வேலை கிடைத்த பிறகு கடனைச் செலுத்திக் கொள்ளலாம்' என்று அசிரத்தையாக இல்லாமல், எப்பாடு பட்டோ பணத்தைத் தேடி, வங்கிக் கடனை அடைக்கத் தூண்டியது அவர் மேற்கொண்ட முயற்சி. அவருக்கு வேலை கிடைத்ததற்கு அந்த முயற்சியும் ஒரு காரணமாகும்.

*தொடரும்....*

❋❋❋

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

## பஸ் டிக்கட் - இரயில் டிக்கட்

காலை 6.15க்கு அன்னை பால்கனி தரிசனம் 1962 வரை தந்தார். 15 நிமிஷம் தரிசனம். பகவான் ஸ்ரீ அரவிந்தருக்குச் சமையல் செய்யுமிடம் பால்கனிக்கு எதிரில் உள்ளது. ஒரு நாள் அன்னை பால்கனிக்கு வந்த சமயம் அவரைத் தரிசித்து விட்டு சமையல் செய்யும் சாதகி சமையல் செய்தார். மறுநாளிலிருந்து சமையலை ஆரம்பிக்குமுன் அன்னை பால்கனிக்கு வரவேண்டும் என அவர் பிடிவாதத்தை அன்னை ஏற்றதால் பால்கனி தரிசனம் உற்பத்தியாயிற்று. கடலூரில் பாண்டிக்கு முதல் பஸ் காலை 5 மணிக்கு. அது சுமார் 6 மணிக்கு புதுவை வந்து சேரும். 15 நிமிஷத்தில் பால்கனித் தரிசனத்திற்கு வர முடியும். அன்பர் ஒரு நாள் அப்படி வரும்பொழுது வழியில் பஸ்ஸை நிறுத்தி கண்டக்டர் டிக்கட் சோதனை செய்தார். அதற்கு 10 நிமிஷத்திற்கு மேலாகும். "யார் டிக்கட் வாங்கவில்லை" என அவர் கேட்ட கேள்விக்குப் பதிலில்லை. ஒருவரைக் கண்டுபிடித்து இறங்கச் சொன்னார். அவர் மறுத்து இறங்குமிடத்தில் பணம் பெற்றுத் தருவதாக வாதமிடுவதை கண்டக்டர் ஏற்கவில்லை. தன்னிடம் மூட்டை ஒன்றிருப்பதால் இறங்க முடியாது என்று அவர் வாதாடுகிறார். நேரம் கடந்தால் தரிசனம் தவறும். ஒரு டிக்கட் 62 பைசா. அன்பர் 10 ரூபாய் கொடுத்திருந்தார். அப்பிரயாணி சார்பாக அன்பர் பணம் கொடுத்தார். பஸ் புறப்படவில்லை. மேலும் ஒருவரிடம் டிக்கட்டில்லை. அவர் முதல்வருடன் வருபவர். அன்பர் அதையும் ஏற்றபின் பஸ் புறப்பட்டது. தரிசனம் கிடைத்தது.

1980க்கு மேல் கடந்த கால சமர்ப்பணத்தில் இந்த நிகழ்ச்சி அன்பருக்கு நினைவு வந்தது. காரணம் தேடினார். இந்நிகழ்ச்சிக்கு 5 ஆண்டு முன் ரயிலில் பயணம் செய்தபொழுது ஊர் வந்தபொழுது தூங்கிவிட்டதால் அந்த எக்ஸ்பிரஸ் ரயில் அடுத்த ஸ்டேஷனான ஸ்ரீரங்கம் வந்தது. கையில் திரும்பிப் போக பணமில்லை. அங்கிருந்து வீட்டிற்கு கடிதம் எழுதி பணம் கேட்டார். வீட்டார் அவரை வந்து அழைத்து வந்தனர்.

அதற்கு முன் மாணவர் வாழ்வில் டெல்லிக்கு மாநாட்டிற்குப் போனபொழுது உடன் வந்த மாணவர் தன் டிக்கட் பணத்தைச் செலவு செய்துவிட்டுத் திண்டாடினார். அன்பர் தன் டிக்கட்டை அவரிடம் கொடுத்துவிட்டு, டிக்கட்டில்லாமல் பயணம் செய்து தப்பினார்.

❄ நடந்த செயல் வாழ்வில் மீண்டும் வரும்.

❄ பொறுப்பற்றவர் பொறுப்பை ஏற்றால் வாழ்வு தண்டிக்கும்.

***செயல் சூட்சும உலகுக்குரியது. பிறந்தது அழியாது. சுழன்று சுழன்று வந்து வளர்ந்தபடியிருக்கும்.***

❀❀❀

## வைத்திய செலவு

நெடுநாள் இந்தியாவில் தங்கியிருந்த அமெரிக்க அன்பர் அமெரிக்கா திரும்பினார். வயிற்றுப்போக்கு வந்தால் இங்கு 2 அல்லது 3 மாத்திரை டாக்டர் கொடுப்பார். ரூ.200/-க்குள் முடியும். அங்கு போனபொழுது வயிற்றுப்போக்கு வந்தது. டாக்டரிடம் போனார். டெஸ்ட் பல செய்தனர். $ 500 பீஸ். மாத்திரை $ 100. வீட்டுக்கு வந்தபின் மேலும் ஒரு பில் $ 1500க்கு வந்தது. மொத்த செலவு ரூபாய் 25,000+5,000+37,500 = 67,500 ரூபாய். இது கற்பனைக்கும் எட்டாதது.

மஞ்சள்காமாலை வந்தால் ஆயுர்வேத டாக்டர் மூன்று வேளை கீழாநெல்லி சூரணம் தருவார். அன்று அதன் விலை ஒன்றரை ரூபாய். வேலைக்குப் போகலாம். லீவு போட வேண்டாம். மூன்று நாளில் குணமாகும். ஆஸ்பத்திரிக்குப் போனால் பல மருந்து தருவார்கள். ரெஸ்ட் முக்கியம் என்பார்கள். ஒரு மாதமாகும். குணமாவது நிலையில்லை. ஒரு அரசியல் தலைவரும், ஒரு MLAவும் மஞ்சள் காமாலையால் ஆஸ்பத்திரியில் இறந்தனர்.

டாக்டர்கட்கு டெஸ்ட் செய்வது முக்கியமாகிவிட்டது. எல்லா டெஸ்டும் செய்தபின்னரே வைத்தியம். ஒரு பெண்ணுக்குச் சளி விடவில்லை. இதயம், நுரையீரல், எக்ஸ்ரே, ஸ்கேன் செய்து கொடுத்த மாத்திரைகள் ஒரு மாதம் குணப்படுத்தவில்லை. வேறு டாக்டரிடம் போனார். 'உங்களுக்கு அஜீரணம்' என்று கூறி மாத்திரை கொடுத்தார். ஒரு வாரம் சாப்பிட்டதில் குணம் தெரிந்தது. ஒரு மாதத்தில் குணமாயிற்று.

முறைகள் முக்கியம். டெஸ்ட் முக்கியம். ஆனால் டெஸ்ட்டை முக்கியமாக நம்பினால் ஒரு புது அம்சம் எழும். முறைகட்காக நாம் வாழ்வதாக முடியும். அந்த வழியில் அமெரிக்க டாக்டர் வயிற்றுப் போக்குக்கு 67,000/- ரூபாய் செலவு வைத்தார். இது பண விரயம். இம்முறையை மேலும் பின்பற்றினால் அடுத்த புதிய விஷயம் உற்பத்தியாகும். **எந்த முறைக்கும் கட்டுப்படாத நிலைக்கு நோய் வந்து சேரும்.**

டாக்டர் நோயாளியை அறிதல் அவசியம். நோயை அறிவதும் மருந்து புரிவதும் இரண்டாம்பட்சம். தோள்பட்டை வலிக்கு 70,000 ரூபாய் அப்பலோவில் செலவு செய்தவர் குணமாகவில்லையென உள்ளூர் டாக்டரிடம் அழைத்துச் சென்றார். இரண்டு வைட்டமின் மாத்திரை கொடுத்தார். ஜுரம் இறங்கியது.

❄ டாக்டர் நோயாளியை அறிய வேண்டும்.

❄ நோயை அறிவதாலும், மருந்தை அறிவதாலும் முறைகளின் முக்கியத்துவம் வளரும்.

❄ நோய் குணமாகாது.

***முறை முக்கியமானால் மனிதன் மூலையில் போய் உட்கார வேண்டும். அறிவு தெளிவு பெறுவது அவசியம்.***

❀❀❀

Vol. I Issue 9 December 2011
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/2012-2014
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11

**புதிய வெளியீடுகள்**

| | |
|---|---|
| ESSAYS ON ACCOMPLISHMENT<br>N.Asokan | ரூ.150/- |

**கர்மயோகியின்**

| | |
|---|---|
| அன்னையின் ஆன்மீகப்பரிசு | ரூ.100/- |
| லைப் டிவைன் - கருத்துகள் | ரூ.100/- |
| பரம்பொருள் III | ரூ.200/- |
| எங்கள் குடும்பம் (பாகம் 2) | ரூ.250/- |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | ரூ.150/- |

**சொசைட்டியின் பிற வெளியீடுகள்**

| | |
|---|---|
| லைப் டிவைன் விரிவுரைகள்<br>*தமிழாக்கம்:* என். அசோகன் | ரூ.100/- |
| SATYA JYOTHI<br>(CONCISE TRUISMS)<br>N.Asokan | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

**கிடைக்குமிடம்**

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்டா நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
23/1, மேற்கு சாலை,
மேற்கு C.I.T. நகர்,
சென்னை - 600 035.
✆: (044)-24347191

Vol. I Issue 9 December 2011

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## டிசம்பர் 2011